ISSUE 02
2022 / SEPTEMBER



# நுண்நிதிக் கடன் பிரச்சினை

www.facebook.com
www.twitter.com
www.youtube.com

VOICE OF CITIZENS

CENTRE FOR POLICY ALTERNATIVES
விகல்ப ப்ரதிபத்தி கேந்த்ரய
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**06**

**நுண் நிதியளிப்பு நாட்டில் ஒட்டுமொத்த சமூக அழிவுக்கு வழிவகுக்கலாம்.**

- துசித சிறிவர்த்தன

**21**

**நுண் நிதி கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்ட ஆதிவாசி பெண்கள்**

- லக்மால் கே பதுகே

2022 / SEPTEMBER

ISSUE 02

**ஆசிரியர்**

லயனல் குருகே
ஜயசிரி ஜயசேகர

**பக்க வடிவமைப்பு**

நலிந்த செனெவிரத்ன

**பக்கத்திற்கான புகைப்படங்கள்** Nilantha Sanjeewa on Unsplash
**ஏனைய புகைப்படங்கள்** M. Pradeepan - CPA

---

இப் பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள், இவற்றுள் மேற்படி ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூறுவதோடு அவை கட்டாயமாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கமாட்டா.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாகத் திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

முகவரி : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு - 05, இலங்கை
தொலைபேசி : +9411 2081384, +94112081385, +94112081386
ஃபக்ஸ் : +9411 2081388

**மின்னஞ்சல்** : info@cpalanka.org
**இணையதளம்** : றறற.உியடயமெய.ழசப
**∴பேஸ் புக்** : றறற.கயஉநடிழழம.உழஅ஺உியளட
**டுவிட்டர்** : ளுஉியளட

# உள்ளடக்கம்

**04**

**அரசாங்கத்தின் தலையீடு மிகவும் அவசியமானது**

- பதிப்பாசிரியர்





**06**

**நுண் நிதியளிப்பு நாட்டில் ஒட்டுமொத்த சமூக அழிவுக்கு வழிவகுக்கலாம்.**

- துசித சிறிவர்த்தன

**21**

**நுண் நிதி கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்ட ஆதிவாசி பெண்கள்**

- லக்மால் கே பதுகே





# அரசாங்கத்தின் தலையீடு மிகவும் அவசியமானது

நுண்நிதிக் கடன் செயற்திட்டம் என்பது ஆசிய மற்றும் ஆபிரிக்க பிராந்தியத்தில் வெவ்வேறு நாடுகளில் வறுமையினால் பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டுவதற்காக உபயோகப்படுத்தப்பட்ட மிகவும் வெற்றிகரமான திட்டமாகும். வங்கியொன்றில் கடனைப் பெறுவதற்கு தகுதியற்ற சமூக வறுமைக் கோட்டினை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக இச் செயன்முறை ஊடாக தங்களது சுய வாழ்வாதார வழியொன்றை உருவாக்கிக்கொள்வதற்கான முதலீட்டினை நிவாரணக் கொடுப்பனவின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. பங்களாதேஷ் இதற்கு மிகச்சிறந்த உதாரணமான நாடாகும். இந்த விடயம் தொடர்பில் அதிகளவிலான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு இது மிகவும் வெற்றிகரமான ஒரு செயற்திட்டமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நுண்நிதிக் கடன் செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீடு கட்டியெழுப்பப்படுவதானது குறித்த கடனுடன் தொடர்புபடுகின்ற அங்கத்தவர்களின் சேமிப்பின் ஊடாகவாகும். அவர்களின் சேமிப்பு மற்றும் சேமிப்பிற்கு பழக்கப்பட்டு அவர்களின் முதலீட்டினை உருவாக்கிக் கொண்டு, மிகவும் சிறிய அளவில் கடன் வழங்குவதற்கு ஆரம்பிப்பதோடு இக்கடனுக்காக மிகவும் சிறியதொரு வட்டியினையே அறவிடுகின்றனர். இவ்வாறாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் இவ் அமைப்பு பின்னாளில் வேறு நிறுவனங்களின் கடன் வழங்கும் செயற்திட்டத்தோடு இணைவதோடு அக் கடனை மீண்டும் வழங்குவது குறித்த கடனைப் பெற்று முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் மற்றும் கடன் மீளச் செலுத்துவதற்கான ஆளுமை தொடர்பில் ஒழுங்குமுறையான மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். அரச நிதி தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரிகள் இந்த ஒழுங்குவிதிகளை தயாரிப்பார்கள்.

எனினும் இலங்கையில் நுண்நிதிக் கடன் வழங்கும் செயற்திட்டத்தின் ஆரம்பம் தொடக்கம் அதன் அடிப்படை நோக்கத்திலிருந்து விலகிய விகாரமான விம்பத்துடன் கடன் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மரக்கிளைகள் உருவெடுப்பதைப் போல உருவாகின்ற குறித்த கடன் வழங்கும் நிறுவனங்கள் கிராமங்களுக்குச் சென்று, எவ்விதமான மதிப்பீடுமின்றி போட்டியின் அடிப்படையில் கிராமத்து பெண்களுக்கு கடன்களை வழங்குவதோடு, அதற்காக அதிகளவிலான வட்டியையும் அறவிடுகின்றனர். கடன் வழங்கும் போது குறித்த கடனானது என்ன செயற்பாட்டிற்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை கருத்திற் கொள்ளாமல் கடனை மீளச் செலுத்துவதற்கான ஆளுமை இருக்கின்றதா என்ற மதிப்பீட்டினையும் செய்யாமல் கடன் வழங்கப்படுகிறது. இவ்வாறாக கடனைப் பெற்ற பெண்கள் இந்நிறுவனங்களில் கடனைப் பெற்று அவற்றை மீளச் செலுத்த முடியாமல் பாரியதொரு கடன் வலையில் சிறைப்பட்டுள்ளதுடன் அது பாரதூரமான சமூக பிரச்சினையாக வடிவம் பெற்றுள்ளது.

குடும்பப் பிரச்சினைகள், மன உளைச்சல்கள், மற்றும் தற்கொலை செய்து கொள்ளல் போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு இது காரணமாக அமைகின்றது.

தான் பெற்றுக் கொண்ட கடனுக்கான உடன்படிக்கைகள் என்ன என்பது தொடர்பில் கூட இக் கடனாளிகள் அதிகமானோருக்கு தெளிவு கிடைப்பதில்லை என்பதோடு அவர்களினூடாக கடனுக்காகப் பெறப்பட்ட உடன்படிக்கைகளும் ஆங்கில மொழியிலேயே காணப்படுகிறது. அதன் ஊடாக சிங்கள மற்றும் தமிழ் ஆகிய மக்களின் மொழி உரிமையும் கூட மீறப்பட்டுள்ளது. மேலும் குறித்த உடன்படிக்கையின் பிரதிகளை குறித்த கடனாளிகளுக்கு பெற்றுத்தறாமை, கடன் தவணைக் கட்டணத்தினை செலுத்தும் போது அதற்கான பற்றுச் சீட்டினை வழங்காமை போன்ற காரணங்களினால் தாங்கள் பெற்ற கடனில் செலுத்தப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பது தொடர்பில் கடனாளிகள் மத்தியில் மாறுபட்ட கருத்துகளே காணப்படுகிறது. இந்த நிலையின் காரணமாக கடன் பெறுனர்கள் பாரியதொரு சுரண்டலுக்கு உட்படுகின்றனர் என்பது வெளிப்படையான உண்மையாகும். கடன் வழங்குகின்ற நிதி நிறுவனங்கள் தொடர்பில் எழுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவர்களிடமிருந்து அதனை தவிர்க்கும் வகையிலான பதில்களே கிடைக்கப்பெற்றன.

**கடன் வழங்கும் போது குறித்த கடனானது என்ன செயற்பாட்டிற்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை கருத்திற் கொள்ளாமல் கடனை மீளச் செலுத்துவதற்கான ஆளுமை இருக்கின்றதா என்ற மதிப்பீட்டினையும் செய்யாமல் கடன் வழங்கப்படுகிறது.**

இலங்கையில் நுண்நிதிக் கடன் தொடர்பிலான பிரதான பிரச்சினையாகக் காணப்படுவது, நிதி நிறுவனங்களின் ஒழுங்குவிதிகள் தொடர்பில் வகைப்பொறுப்புக் கூற வேண்டிய இலங்கை மத்திய வங்கியிடம் இந்த நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் தொடர்பில் எந்தவொரு ஒழுங்குவிதியும் காணப்படாமையாகும். பதிவு செய்யப்பட்ட, அனுமதி பெற்ற நிதி நிறுவனங்கள் தவிர்ந்த, மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் 4 மாத்திரமே. எனினும் மத்தியவங்கியின் அறிக்கைகளுக்கு அமைவாக நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் நுண்நிதிக் கடன் துறையில் செயற்படுகின்றது. இப்பிரச்சினையானது எவ்வளவு பாரதூரமானது என மேற்கூறப்பட்ட ஒரு விடயத்தை வைத்தே அறிந்து கொள்ள முடியும்

நுண்நிதிக் கடன் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களை அண்மித்து நாங்கள் மேற்கொண்ட தேடுதலின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது. விசேடமாக இப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளவர்களின் குரல்களுக்கு இங்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் போது பிரச்சினையின் வெவ்வேறு துறைகள் தொடர்பில் வெளிப்படுகிறது.

இந்த நிலை தொடர்பில் அரசானது விரைவாக தலையீடு செய்வதோடு, நுண்நிதிக் கடன் தொடர்பில் கொள்கை ரீதியிலான ஒரு சட்டத்தினை உருவாக்கி குறித்த துறையினை ஒழுங்குமுறையாக விதிமுறைப்படுத்த வேண்டும். நிதி தொடர்பிலான பாராளுமன்றக் குழு, நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஒன்றிணைந்து இது தொடர்பில் விரிவாக காரணங்களை தேடி ஆராய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தான்தோன்றித்தனமான மற்றும் அசாதாரணமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதோடு அசாதாரணத்திற்குள்ளான பாதிக்கப்பட்ட கடன் பெறுனர்களுக்கு கூடுதலான நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்திட்டத்தினை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பது எமது அவதானிப்பாகும்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நுண்நிதி துறைசார் நிபுணர்கள், சிவில் சமூகங்கள் கொள்கை வகுப்பாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் விரிவான கலந்துரையாடலுக்குச் செல்வது காலத்தின் தேவையாகும்.

**பதிப்பாசிரியர்**

# நுண் நிதியளிப்பு நாட்டில் ஒட்டுமொத்த சமூக அழிவுக்கு வழிவகுக்கலாம்.

**துசித சிறிவர்த்தன – சட்டத்தரணி/ஆய்வாளர் – மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

## அறிமுகம்

குறைந்த வருமானம் பெறுவோர் தமக்கு அவசியமான நிதிச் சேவைகளை அணுகுவதற்கு பெரும்பாலும் வாய்ப்பு இல்லாதபோது, நுண் நிதியளிப்பு பொருளாதாரத்தின் இன்றியமையாத அம்சமாக மாறுகிறது. குறைந்த வருமானம்பெறும் மக்களிடையே நிதிச் சேவைகளுக்கான மேம்படுத்தப்பட்ட அணுகல் வறுமை நிலையை குறைப்பதற்கு உதவியாக அமைவதோடு, விளிம்பு நிலையில் உள்ளவர்கள் சொத்துக்களை பெறுவதற்கும், வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும், பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகும் இடர்வரு நிலையை குறைப்பதற்கும் உதவுகிறது. மேலும், வறியவர்களுக்கு உதவுவதற்கான ஆலோசனை குழுக்கள் (CGAP- 2000) நுண் நிதியளிப்பு என்பதற்கு "குறைந்த வருமானம்



**கிறிஸ்டினா ஹாமினே**
கந்தளாய்

நாங்கள் கடன் பெற்றோம் இல்லை என்று கூறவில்லை அந்தக் கடனையும் நாங்கள் மீள செலுத்திக் கொண்டே வருகின்றோம். அரசினால் கடன் மீள செலுத்தத் தேவையில்லை என்று குறிப்பிட்டதன் காரணமாகவே நாங்கள் கடனை செலுத்தவில்லை.. தற்பொழுது அதற்கு இரண்டு, மூன்று மடங்காக வட்டியினை சேர்த்து கடனை செலுத்துமாறு இவர்கள் எங்களை தொந்தரவு செய்கின்றனர். மேலும் 34,000 ரூபா கடனைப் பெற்றால் அதற்கு 54,000 ரூபா மேலதிகமாக செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. 18 வீதம் என்று குறிப்பிட்ட வட்டி வீதமானது தற்பொது 30, 35 வீதம் வரையில் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனை மீள செலுத்துவதற்கான எவ்வித வருமானமும் எங்களுக்கு இல்லை.

பெறுவோருக்கு நிதிச் சேவைகளை வழங்குதல்” என்ற வரைவிலக்கணத்தை தந்துள்ளன. மேலும், “நுண் நிதிச் சேவைகள் மக்கள்தம் வறுமைக்கு எதிராக திடமாக போராடுவதற்கு உதவுகிறது” என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நிதி ரீதியான அணுக்கம் மிகவும் குறைவாக காணப்படுகின்ற எமது நாட்டில், நுண் நிதியளிப்பு மிகவும் அவசியமானது என்ற வாதம் தீவிரமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அனுமதியற்ற நிதித் தொழில்கள் ஊடாக நுகர்வோர் சுரண்டப்படுவதை தடுப்பதற்காக வலுவான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை பொறிமுறை ஒன்றை அமைத்தல் மற்றும் அதனை பயனுறுதியாக நடைமுறைப்படுத்தல் மிகவும் அவசியமானது.

இந்தப் பின்னணியில், பலதரப்பட்ட நிதி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற நுண்நிதிக் கடன் வசதிகளை ஆராயும்போது, குறைந்தபட்ச சொத்துகள் கூட இல்லாத வறிய மற்றும் விழிப்புநிலை மக்களை முதன்மையான இலக்காகக்கொண்டு நுண் நிதிக்கான அணுக்கம் ஏற்படுத்தப்படுவதை அவதானிக்கலாம். மேலும், பெரும்பாலான பிரதேசங்களில் பலதரப்பட்ட நிறுவனங்களில் கடன் வசதியினை பெற்றுள்ள மற்றும் மறுபுறத்தில் தமது உரிமைகள் மீறப்படும் நிலை ஏற்படக்கூடிய அனேகமான பெண்கள், மகளிர் குழுக்களின் அங்கத்தவர்களாக இருப்பது உண்மையான விடயமே.

இந்தக் கட்டுரையானது பொலனறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் தீர்க்கமான பிரச்சினைகளை சுருக்கமாக ஆராய்கிறது. எவ்வாறாயினும், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை பொறிமுறை நடைமுறையில் இல்லாமை, கடன் பெறுபவர்கள் அறிவும் புரிதலும் இல்லாமை, சட்ட வரம்பு அத்துடன் ஆற்றுப்படுத்தும் வழிமுறை பற்றிய அறிவு இல்லாமை போன்ற விடயங்கள் பிரச்சினைகளின் மையமாக இருப்பது யாவரும் அறிந்ததே. அனுமதியற்ற நிதித் தொழில்களுக்கு இரையான நபர்களுக்கான தீர்வுகளைத் தேடக்கூடிய வழிமுறைகளும், நாட்டின் ஏனைய பாகங்களில் காணப்படுகின்ற வழிமுறைகளும் ஒப்பீட்டளவில் ஒத்த தன்மையினைக் கொண்டுள்ளன.

நுண் நிதி அல்லது நுண் நிதிக் கடன் சேவைகளுடன் தொடர்பினைக் கொண்டுள்ளவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதால், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள்



## வட்டிக்கு மேல் வட்டியினை செலுத்தும் கடனாளிகள்

**கே.எம். சித்ரா குமாரி**

தல்கஸ்வெவ

முடிந்தவரை நாங்கள் கடனை செலுத்தியுள்ளோம். வட்டிக்கு மேல் வட்டி செலுத்தியுள்ளோம். ஒரு லட்சம் கடன் பெற்றால் இரண்டு லட்சம் ஆகும் வரையில் நாங்கள் கடன் செலுத்தியுள்ளோம். அதற்கு மேலும் கடன் செலுத்துமாறு கோரி கடிதங்களும் வந்துகொண்டே இருக்கின்றன. நாங்கள் கஷ்டத்தில் இருக்கின்றோம் எங்களால் அவ்வாறு கடன் செலுத்த முடியாது. இந்த தல்கஸ்வெவ கிராமத்தில் அனைத்து மக்களும் கடனைப் பெற்று மீளச் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். கடைகளுக்கு கடன்களை செலுத்த முடியாமல், வட்டிக்கு கடன்களைப் பெற்று வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நானும் கூட இந்த கடன்களைச் செலுத்துவதற்காக ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகக் கடனைப் பெற்றுள்ளேன். கடன் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தால் எனது தங்க ஆபரணங்கள் கூட ஒன்றும் எஞ்சவில்லை அனைத்தையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, பெண்கள் தம் இருப்பினை குறைந்தபட்ச மட்டத்திலாவது தக்கவைத்துக் கொள்வதற்கு பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பலவித மனித உரிமை மீறல்களை எதிர்நோக்கும் இடர் வரவினையும் சந்தித்துள்ளனர். நுண் நிதி அல்லது நுண் கடன் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொண்டு தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் எண்ணத்துடன் செயற்பட்டவர்கள் தங்களுடைய சொத்துக்களை இழந்ததற்கு மேலதிகமாக அவர்கள்தம் மனித மாண்பையும் இழந்துள்ளனர். மக்களின் உரிமைகள் பற்றிய சமூக உரையாடல்களிலும், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அர்த்தமுள்ள வகை பொறுப்பை கோரும் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய உரையாடல்களிலும் வாழ்வாதாரத்திற்கான உரிமையை "வாழ்வதற்கான உரிமை" யின் ஓர் அங்கமாக ஏற்றுக் கொள்வது பற்றி நுணுகி ஆராய்வது முக்கியம் பெறுகிறது. இலங்கையின் அரசியலமைப்பில் அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்காவிட்டாலும், அது குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் குறைவான சொத்துக்களைக் கொண்டுள்ளவர்களுக்கு முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிச் சேவைகளை அணுகுவதற்கு உத்தரவாதமளிப்பதுடன் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முடியும்.

ஏனைய நியாயாதிக்கங்களின் வாழ்வுரிமையுடன் சம்பந்தப்பட்ட வியாக்கியானங்களை ஆராயும்போது, மனித உரிமை பற்றிய விரிவான பொருள்கோடலுக்கு எடுத்துக்காட்டாக கொள்ளப்படுகின்றன இந்திய உயர் நீதிமன்றத்தின் "நடைபாதை வாசிகளின் வழக்கு" (ஓல்கா டெலிஸ் எதிர் மும்பை மாநராட்சி) தீர்ப்பின்படி "உயிர்வாழும் உரிமை என்பது வாழ்க்கை நடத்துவதற்கான தொழில் செய்யும் உரிமையையும் வாழ்விட உரிமையையும்



## கடன் வழுங்கும் போது தருகிறோம் என்று கூறுகின்ற சமூகை ஒப்பந்தங்கள் கடன் மீளப் பெறும் போது அதற்கு எதிர்மாறாக செயற்படுதல்

**சுமுது பிரியங்கா ஹெட்டியாரச்சி**

நான் கடனை மீள செலுத்திக் கொண்டு செல்லும் போது எனது கணவருக்கு ஏற்பட்ட இறுதய நோயின் காரணமாக கடனை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதன் பிறகு ஒரு வருடத்தில் எனது கணவர் இறந்துவிட்டார். அதன் பிறகு ஒருவருடமாக என்னால் கடனை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் முதலில் குறிப்பிட்டார்கள் இந்த கடன் முதலை பெற்றவர்களுக்காக சாட்சி கையொப்பமிட்ட அல்லது கடனைப் பெற்றவர்கள் மரணித்தால் அல்லது பாதிக்கப்பட்டால் அந்த கடன் செலுத்த தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். இதுவரையில் எனது எந்த ஒரு கடனும் அவ்வாறு செய்யப்படவில்லை. எனது கணவர் இறந்ததன் பின்னர் எனக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. அவ்வேளையில் என்னிடமிருந்த காணி ஒன்றினை விற்று தான் எனது கடனை முழுவதுமாக செலுத்தினேன். மேலும் என்னால் ஒரு கடனை மாத்திரம் மீள செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. முழுவதுமாக செலுத்தாவிட்டாலும் முடிந்தவரையில் கடனை செலுத்தினேன் இன்னும் 62000 ரூபாவினை மீள செலுத்தாவிட்டால் நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்வோம் என உத்தரவிட்டுள்ளனர். என்னைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை.

உள்ளடக்கியது". எனவே, வறுமைக்கு எதிராக போராட குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு உதவும் பொருட்டு இயங்கிவருகின்ற அனுமதியற்ற நிதித் தொழில் சேவைகள் மற்றும் செயற்பாடுகளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும் பிரதான அங்கமாக மாறுகிறது. அதேபோல் அது அடிப்படையில் வறிய மக்கள் மீது மேலும் அடக்குமுறையை பிரயோகிக்க காரணமாகிறது.

தேசிய ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் அத்துடன் ஏனைய சுயாதீன அரசு நிறுவனங்கள், ஆணைக்குழுக்கள், அரச சார்பற்ற பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்புடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெற்றுக்கொண்ட சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை திரட்டுதல் மற்றும் பரிந்துரைத்தல் இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## நுண் நிதி மற்றும் நுண் கடன் சம்மந்தப்பட்ட செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் யாவை?

2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண் நிதியளிப்புச் சட்டம், நுண் நிதித் தொழில்களை மேற்கொள்ளும் கம்பெனிகளுக்கு உரிமங்களை வழங்குதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக்கான ஏற்பாடுகள் அடங்கிய பிரதான சட்டம் ஆகும். இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமம் பெற்ற நுண் நிதிக் கம்பெனிகளுக்கு, கம்பெனியின் தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன செயற்பாடுகள் உட்பட்ட எந்தவொரு அம்சத்திற்குமான அறிவுறுத்தல்களை வழங்க முடியும். அச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் 01 மற்றும்



### கடன் செலுத்தியதற்கான தெளிவான எழுத்து மூலமான ஆவணங்கள் இல்லாமை

**ஜீ.ஜீ. நிலூக்கா குமாரி**
தல்கஸ்வெவ

நான் பெற்ற கடனுக்காக எனக்கு எதிராக தற்பொழுது வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனிகும் இது வரையில் நான் மீளச்செழுத்திய கடன் தொடர்பான எழுத்து மூலமான ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் எச்.என்.பி அட்டைக்கு பணம் செலுத்தினேன் அதனூடாக பணத்தைப் பெற்றுக்கொள்வதாக கூறி வீட்டிற்கு வந்து படிவம் ஒன்றிகை பூர்த்தி செய்து கொண்டு சென்றார்கள். கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக நான் 13,000 ரூபா அடிப்படையில் செலுத்திய பணத்தை தற்பொழுது இல்லை என்று சொல்வதோடு 200,000 ரூபா கடனை நான் செலுத்த வேண்டும் என்று கூறி வழக்கு தொடர்ந்துள்ளனர். இதுவரையில் பணம் செலுத்தியதற்காக அவர்கள் கொடுத்த ரசீதின் தகவல்கள் யாவும் அழிந்து போய்விட்டது. அதனால் எவ்வித பயனும் இல்லை. அவர்கள் வழங்கும் துண்டு பிரசுரமானது பேரூந்து டிக்கட் போன்று இருப்பதனால் விரைவில் அழிந்துவிடுகிறது. நாங்கள் கடன் செலுத்தியதாகவோ அல்லது கடன் பெற்றதாகவோ எவ்வித படிவங்களும் இல்லை. வட்டி மற்றும் காப்புறுதி என்று கூறிக் கொண்டு 15,000 ரூபாவினை செலுத்தினேன் அதற்கான எவ்வித உறுதிப்பத்திரங்களும் எங்களிடம் இல்லை.

இதோ பாருங்கள் எங்களுக்கு வழங்கியிக்கும் துண்டுபிரசுரங்களைப் பாருங்கள் அவர்கள் வழங்கிய அனைத்தும் வெள்ளையாகவே காணப்படுகின்றன. நாங்கள் எவ்வளவு கடனை செலுத்தியிருக்கின்றோம் என்பதனை அறிந்து கொள்வதற்கான எவ்வித உறுதியும் இல்லை என்பதே உண்மை.

02ஆம் உட்பிரிவுகளின் கீழ், நாணயச் சபைக்கு இணக்கம் பற்றி கண்காணிப்பதற்கான வழிகாட்டு நெறிகளை வழங்கமுடியும். அத்தகைய வழிகாட்டு நெறிகளை பின்பற்றத் தவறினால், அது முறையே 17ஆம் பிரிவு ஏற்பாடுகளின் கீழ் குறித்த நுண் நிதிக் கம்பெனியின் உரிமத்தை இரத்து செய்யலாம்.

2019இல் பணத்தை கடனாக வழங்கும் தொழில்கள் மற்றும் நுண் நிதித் தொழில்களை உறுதிப்படுத்துவதற்கான சட்டமொன்றைக் கொண்டுவருவதற்கும், அந்தத் தொழிலில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்புக்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான காரணங்களுக்காக ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்ட மூலத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டது. எனினும், பல வருடங்கள் கழிந்துள்ள நிலையில் குறித்த சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ளதுடன், அது இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அந்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் வங்கி வட்டித்தொழில், நுண் நிதித் தொழில் பற்றிய அண்மைக்கால நகர்வுகளை இற்றைப்படுத்தி விரிவானதொரு மீளாய்வினைச் செய்தல் வேண்டும்.

## நுண் நிதிச் சார்ந்த சேவைகளில் கடன் வசதியினை வழங்குவது யார்?

மத்திய வங்கியின் தரவுகளுக்கு அமைய, 2021 ஜூன் 30ஆம் திகதியளவில் உரிமம்பெற்ற 04 நுண் நிதிக் கம்பெனிகள் மட்டுமே உள்ளன. அவையாவன,

1) வரையறுக்கப்பட்ட பெரென்டினா மைக்ரோ முதலீட்டுக் கம்பெனி
2) லக் ஜய மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
3) தும்பர மைக்ரோ கிரெடிட் லிமிடெட்
4) சீஜய மைக்ரோ கிரெடிட் லிமிடெட்

உரிமம் பெற்ற நுண் நிதி கம்பெனிகளாக பதிவு செய்யப்படாத எனினும், உரிமம் பெற்ற நிதிக் கம்பெனிகளாக பதிவு பெற்றுள்ள சில பிற நிறுவனங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக சிறிய அளவிலான கடன் வசதிகளை வழங்கி வருகின்றமை கவனம் பெறவேண்டிய விடயமாக உள்ளது. அத்தகைய உரிமம் பெற்ற நிதிக் கம்பெனிகள் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்துறை சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த 1998ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்பட்ட நிதித்தொழில் சட்டத்தின் அடிப்படை நோக்கம் யாதெனில், ஒழுங்குபடுத்தப்படாத, சட்டவிரோத மற்றும் அனுமதியற்ற நிதித் தொழில்களை ஒழுங்குபடுத்துதல் அத்துடன்



**எச். நிசாந்தி நில்மினி**
சிங்ஹகம, அக்போபுர

**நான் கொமர்கஷல் க்ரடிட் நிறுவனத்தில் கடன் ஒன்றினைப் பெற்றிருந்தேன். அதன் பிறகு எனது அவசர பணத் தேவையின் காரணமாக எனது மூன்றரை பவுன் தங்க ஆபரணம் மற்றும் இரண்டு மோதிரங்களையும் நான் அடகு வைத்திருந்தேன். பிறகு அதனை மீட்கச் சென்ற போது உங்களது கடன் இன்னும் நிலுவையில் இருக்கிறது அதனை செலுத்திவிட்டு தங்க ஆபரணங்ளை மீளப் பெறுங்கள் என்று குறிப்பிட்டார்கள் பிறகு அது தொடர்பில் நான் சிந்திக்கவில்லை. தற்பொழுது எனது அனைத்து ஆபரணங்களும் மீளப் பெற முடியாமல் அனைத்தும் வீணாகிப் போனது.**

கண்காணிப்பை வலுப்படுத்துவதாகும். இற்றைக்கு பத்தாண்டுகளுக்கு முன்னர் அனுமதியற்ற நிதித் தொழில்களால் நிதிச் சேவைகளை பெற்றுக் கொண்டவர்களுக்கு எதிர்மறையான தாக்கத்தை உண்டுபண்ணும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதை இந்நிலை எடுத்துக்காட்டுகிறது.

எனினும், நுண் நிதி சார்ந்த, நுண் நிதி அல்லது பணத்தைக் கடனாக அளிக்கும் சேவையினை வழங்கிவரும் பல்வேறு நிறுவனங்கள் இலங்கை நுண் நிதியாளர் சங்கத்தில் இரண்டு தொகுதிகளின் கீழ் அங்கத்துவம் பெற்றுள்ளன.

1. சாதாரண அங்கத்தவர்கள்
2. இணை அங்கத்தவர்கள்

இலங்கை நுண் நிதியாளர் சங்கமானது, நாட்டிலுள்ள சில நுண் நிதியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள வலையமைப்பாகும். இந்தச் சங்கமானது இலங்கையின் நுண் நிதி நிறுவனங்களுக்கான ஒருங்கிணைப்பு நிறுவனமாக மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நிதிக் கம்பெனிகள், உரிமம் பெற்ற நுண்நிதிக் கம்பெனிகள் மற்றும் கடன் சார்ந்த தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற பிற எந்தவொரு நிறுவனம் அல்லது நபரினால் வழங்கப்படுகின்ற சகல விதமான கடன் உட்பட்ட நுண் நிதியுடன் தொடர்புடைய சகல துறைகளுக்குமான ஒரு தேசியக் கொள்கை இல்லாமை இலங்கையின் முக்கியமான கொள்கை ரீதியான பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு கொள்கை இல்லாததன் விளைவுகளை கடன் வழங்கும் அளவுகோல்கள், வட்டி கணிக்கப்படும் முறை கடன் தவணை தவிர்வு காரணமாக ஏற்படுகின்ற சட்டரீதியான விளைவுகள் மற்றும் தாமதிப்பதால் மேலதிக கட்டணங்களை பெறுகின்ற நபர்கள் பற்றிய மக்களின் புரிதல் வரையறை செய்யப்படுதல் போன்ற பிரச்சினைகளை தீவிரமாகிறது. மேலும், நுண்நிதிக் கடன்களை வழங்கும் நிறுவனங்களின் தொழிற்பாடு மற்றும் சட்டரீதியான தன்மை பற்றிய தகவல்கள் இல்லாததும், ஓர் அநீதி ஏற்படும்போது அதற்கான தீர்வு குறித்த ஆற்றுப்படுத்தலைச் செய்வதற்கான முறைமை இல்லாததும் குறிப்பிடத்தக்கது.

## நுண் நிதி அல்லது நுண் கடன் போர்வையில் ஒழுங்குப்படுத்தப்படாத மற்றும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளின் சமூக ரீதியான தாக்கம்.

நுண் நிதி அல்லது நுண் நிதி சார்ந்த சேவைகளை பெற்றுள்ள பெரும்பாலானவர்கள் குறிப்பாக, கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அநீதி மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு இலக்காகி உள்ளனர்.

### ஒழுங்குப்படுத்தப்படாத கடன் வழங்கும் / நுண் நிதித் தொழில்களால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

- கடன் ஒப்பந்தங்கள் மொழி உரிமையை மீறுகின்ற, கடன்பெறுவோர் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் தயாரிக்கப்படாமை. (ஒப்பந்தங்கள் பிரதானமாக ஆங்கில மொழியில் காணப்படும்.
- பாலியல் தொந்தரவு / கடன் தவணைகளைச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் பாலியல் இலஞ்சம் கோருதல்.
- கடன் பெறுபவர்களுக்கு கடன் ஒப்பந்தங்களின் பிரதிகள் வழங்கப்படுவதில்லை. பெண்களின் அந்தரங்கத்திற்கான உரிமையை மீறுதல்
- அநீதியாக வட்டி அறவிடப்படுதல் நிதி முகாமைத்துவம் மற்றும் அமுலிலுள்ள நிவாரணப் பொறிமுறை பற்றிய விழிப்புணர்வு கடன் பெற்றவர்களிடம் இல்லாமை.
- பணத்தைச் சேகரிக்க வருபவர்கள் கடன் பெற்றோரை வாய்மொழி மூலம் தொந்தரவு செய்தல் / அச்சுறுத்தல்.
- சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறி கடன்பெற்றவர்களை அச்சுறுத்தல். முந்திய கொடுக்கல்வாங்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை தவிர்ப்பதற்கு

- கடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களின் சட்டப்படியான அல்லது ஆற்றுப்படுத்தக்கூடிய தரப்பினர் பற்றி அறியாமை அநீதியான கடன்களை மீளத் திட்டமிடுதல் மற்றும் முறைப்பாட்டுப் பொறிமுறை இல்லாமை
- செலுத்திய தொகைக்காக நீண்ட காலம் வைத்திருக்கத்தக்க பற்றுச்சீட்டினை வழங்காமை. கிடைத்த நிதிச் சேவைகள் பயனுள்ளதாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதற்கான பின்தொடர் ஆய்வு / கண்காணிப்பு இல்லாமை
- மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அதிகாரிகளின் பின்தொடர் நடவடிக்கை / கண்காணிப்பு இல்லாமை. கடன் பெற்றவர்களது பிள்ளைகளின் கல்வியில் எதிர்மறையான தாக்கம்
- கண்ணியமான வாழ்வதற்குள்ள உரிமை மீதான எதிர்மறை தாக்கம்
- கடன் பெற்றோருக்கு உள ரீதியாக ஏற்படுகின்ற பாதிப்பு ஒட்டுமொத்த சமூகத்தின் இருப்பினை சீரழித்தல்.

நுண்நிதி அல்லது நுண் நிதி கடன் சேவைகள் ஊடாக பெற்றுக் கொண்ட நிதி வளத்தை பயனுறுதியாக நிர்வகிப்பதற்குப் போதிய அறிவும் புரிதலும் மக்களிடம் இல்லாமை இந்தப் பிரச்சினையை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது. ஒழுங்குபடுத்தல் பொறிமுறையில் காணப்படுகின்ற பலவீனங்களை அடிப்படைச் சவால்களாக இனங்காண முடியும். நுண் நிதித்



**கடனைச் செலுத்தி முடிந்தாலும் கூட உரிய சாட்சி ஆதாரங்களை விடுவிக்காமை**

**எம்.ஜீ. சிரோமி**

மெதகம, கந்தளாய்

நான் முதன் முதலாக LOLC நிறுவனத்தில் எனது காணி உறுதிப்பத்திரத்தினை வைத்து 300,000 ரூபா கடனைப் பெற்றேன். பெற்ற கடனை செலுத்திக் கொண்டிருக்கும் போதே நாங்கள் தனியான ஒரு வேறு குழுவை உருவாக்கி என்னோடு இன்னும் இருவர் இனைந்து மேலும் 100,000 ரூபாயினைக் கடனாகப் பெற்றோம். அதற்கு முன்பதாக நானும் எனது கணவரும் இணைந்து தான் காணி உறுதியை வைத்து இருவரும் சேர்ந்து முதலாவதாக 300,000 லட்சம் கடனைப் பெற்றோம். இவ்வாறு நான் கடனை செலுத்திக் கொண்டு சென்ற போது நான் எனது முதலாவது கடனை செலுத்தி முடித்து எனது காணி உறுதியை கேட்ட போது உங்களது இன்னுமொரு கடன் பாக்கி இருக்கிறது அதனையும் செலுத்துங்கள் பிறகு காணி உறுதி கிடைக்கும் என குறிப்பிட்டார்கள். பிறகு நான் அந்த 100,000 ரூபா கடனையும் செலுத்தி முடித்து நான்கு முறைக்கும் அதிகமாக எனது காணி உறுதியை தருமாறு கேட்டு விட்டேன் இது வரையில் காணி உறுதியைத் தரவில்லை. தற்போது அவர்கள் எனது குழுவில் இன்னும் இருவர் கடனை செலுத்தாமல் இருக்கிறார்கள் அவர்கள் கடனை மீளச் செலுத்தினால் மாத்திரமே உங்களுடைய காணி உறுதி கிடைக்கும் என்று கூறுகிறார்கள். எனது கணவர் வட்டிக்கு கடன் வாங்கியே அந்த அனைத்து கடன்களையும் செலுத்தினார் எனினும் இன்னும் காணி உறுதி மீளப் பெறப்படவில்லை.

துறை மற்றும் சமூகத்திலுள்ள குறைந்த வருமானம் பெறுவோரை இலக்கு வைக்கும் ஏனைய நிதிச் சேவை துறையிலும் நடைமுறைக்குச் சாத்தியமான, கொள்கை மட்டத்திலான மறுசீரமைப்புகள் இந்தச் சவாலை எதிர்கொள்ள அவசியமாகின்றன.
இவ்வாறு நிதி உதவி பெறுபவர்களில் பரம்பரை பரம்பரையாக குறைந்த சொத்துகளுக்கு உரித்துக் கோரும் பெண்கள் பெரும்பான்மையாக உள்ளனர். அதன்படி, இந்த பிரச்சினைகளின் எதிர்விளைவுகள் பெண்களை தனித்தனியாக மாத்திரமன்றி அவர்களது விசித்திரமான குடும்பங்களை நோக்கி நகர்வதோடு, அது தொடக்கநிலை பொருளாதாரப் பிரச்சனையானது மிகவும் சிக்கலான அதேபோல் இயல்பு நிலைக்கு மாற்ற முடியாது சமூக சீர்கேடாக மாறி நுண்நிதி/ நுண்கடன் சேவைகளின் அடிப்படை குறிக்கோளை தகர்த்து விடுகிறது.

நுண்நிதி / நுண்கடன் சேவைகளின் ஒருபகுதியாக தொழிற்படுகின்ற ஒழுங்குபடுத்தப்படாத, அமைதியற்ற மற்றும் சட்ட விரோதச் செயற்பாடுகளின் தீவிரத்தை, கடனைப் பெற்றுக் கொண்ட பெண்களால் பரிமாறிக்கொள்ளப்படுகின்ற சில தனிப்பட்ட அனுபவங்கள் வாயிலாக ஒருவருக்கு புரிந்துகொள்ள முடியும்.

கந்தளாய் பிரதேசத்தைச் சேர்ந்த அத்தகைய ஒரு பெண் கருத்து தெரிவிக்கையில்" எனது கணவருக்கு சட்டரீதியான உரித்து காணப்படுகின்ற காணி உறுதியை பயன்படுத்தி நாங்கள் நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபாய் மூன்று லட்சத்தை கடனாக பெற்றோம். அந்த தொகை எங்கள் இருவரின் பெயரில் இருந்தது. கடனைப் பெற நானும் எனது கணவரும் அந்த நிறுவனத்தின் தேவைக்கு அமைய கூட்டு கணக்கொன்றை ஆரம்பித்தோம். நாங்கள் அந்தக் கடன் தொகையை சீராக செலுத்தி வந்த அதேசமயம் நான் அந்த நிதி நிறுவனத்தில் மற்றுமொரு கடனைப் பெற்றேன். மேலும் இரண்டு பெண்களுடன் மூன்று பெயர் கூட்டாக இணைந்து அந்தக் கடனை பெற்றோம். நாங்கள் பெற்றுக் கொண்ட இந்தக் கடன் தொகைக்கும் காணி உறுதிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. நாங்கள் முதலாவதாக பெற்ற கடனை திருப்பிச் செலுத்திய பின்னர் எங்களுடைய காணி உறுதியை தருமாறு அந்த நிதி நிறுவனத்திடம் கோரினோம். ஆனால் நான் பின்னர் பெற்றுக்கொண்ட கடனை செலுத்தி முடித்த பின்னர் காணி உறுதியை தருவோமென அவர்கள் தெரிவித்தது எனக்கு



**சின்னையா அருள்செல்வி**
**பெருந்தோட்டத்துறைப் பெண்**
ஹட்டன்

**இரவு பகல் என்று இல்லாமல் எந்த நேரமும் எங்களை வந்து தொந்தரவு செய்யும் சந்தர்ப்பங்களும் அதிகமாகும். ஒரு முறை வீட்டிற்கே வந்து எனது கணவரும் அவ்வேளையில் வீட்டில் இருந்தார். அப்போது நீங்கள் பெற்ற கடனை தாருங்கள் என்று அச்சுறுத்தினார். அப்பொழுது நான் கூறினேன் என்னிடம் பணம் இல்லை அந்த அக்கா தானே கடனை பெற்றார் அவரிடமே சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அவர் கூறினார் அந்த அக்காவிடம் பணம் இல்லை என்றும் உங்களுடைய பெயரில் தானே கடன் இருக்கிறது நீங்கள் தான் கடன் செலுத்த வேண்டும் என்று கூறினார். அதன் பிறகு நாளை காலை நான் வருவேன் 20,000 ரூபா பணத்தினை நீங்கள் தர வேண்டும் இல்லாவிட்டால் விளைவு விபரீதமாக இருக்கும் என்று கூறிச் சென்றார்கள். அதன் பிறகு நான் யோசித்துக் கொண்டே இருந்தேன். என்னால் ஒன்றும் செய்ய முடியாத காரணத்தினால் எனக்கே நான் தீ வைத்துக் கொண்டேன்.**

ஆச்சரியத்தைத் தந்தது. அதன் பின்னர் கடன் வழங்கும் வேறு ஒருவரிடம் பணத்தைப் பெற்று அந்தக் கூட்டு கடனைச் செலுத்தி முடித்தாலும் குறித்த நிறுவனம் காணி உறுதியை வழங்க தொடர்ச்சியாக மறுப்பு தெரிவித்து வருகிறது. மூன்று பேர் கொண்ட குழுவில் எஞ்சியுள்ள இருவரும் கடனைச் செலுத்தி முடிக்க வேண்டுமென இந்த நிறுவனம் தெரிவிக்கின்றது. என்னுடைய காணி உறுதியை மேலும் பத்து வருடங்களுக்கு ஒரு பிணையாக அவர்கள் வைத்துக் கொள்வார்கள்.

அவர் மேலும் கூறுகையில் "அவர்கள் பல ஆவணங்களுடன் வந்தனர். ஆவணத்தை காண்பித்து பல இடங்களில் கையொப்பம் வைக்குமாறு கேட்டார்கள். அது ஆங்கிலத்தில் இருந்தது. வாழ்க்கையை கட்டியெழுப்புவது தேவையாக இருந்ததால் எதையுமே வாசித்து அறிய முடியாத ஆவணத்தில் ஒப்பமிட்டேன்" என்றார்

மேற்படி நுண்நிதி கம்பனியின் இந்த அணுகுமுறையானது கடன் பெற்றவர்களின் மனித உரிமைகள் பற்றிய சில பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. பெண்கள் கூட்டாக பெற்ற கடன்களுடன் சம்பந்தப்பட்ட கடன் ஒப்பந்தத்தில், கடனை செலுத்தத் தவறிய வேறு ஒரு நபரின் கடனுக்கான பிணையாக அசையும் அல்லது அசையா சொத்து ஒன்றினை வசப்படுத்திக் கொள்ளுதல் பற்றிய ஒரு ஏற்பாடு கட்டளையாக அல்லது நிபந்தனையாக உள்ளடக்கப்பட்டுள்ளதா என்ற விடயம் பிரச்சனைக்குரியது. பாதிக்கப்பட்ட பெண்களிடம் கடனுக்கான ஒப்பந்தம் ஏதும் இல்லாமையும், நீதிமன்றத்தை நாடும் வரை அதிலுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமையும் இப்படியான அநீதிக்கு உள்ளானவர்கள் சட்டப் பரிகாரத்தை நாடுவதில் சவாலாக உள்ளன.

ஒரு தரப்பினரால் வாசித்து அறிய முடியாது எனினும், வாசித்து அறிந்து கொண்டதை உறுதிப்படுத்தி கையொப்பத்தை இடுமாறு வற்புறுத்துகின்றன ஒரு மொழியில் இணக்கத்தை வெளிப்படுத்துதல் ஒப்பந்த விதிகளை மீறும் செயலாக இருப்பதுடன், இது பிரஜைகளின் மொழி உரிமையையும் மீறுவது ஆகும். ஆகவே, மேலே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சம்பவத்தை உன்னிப்பாக நுணுகி ஆராயவேண்டிய அவசியத்தையும், தீர்வுக்கான மூலோபாயங்கள் தேவைப்படுகின்ற பல பிரச்சினைகளையும் வெளிப்படுத்துகிறது. இதுபோன்ற ஒப்பந்தங்களின் அடிப்படையில் வறிய மக்களுக்கு நுண்நிதிச் சேவைகளை வழங்கும்போது பின்பற்றப்படுகின்ற சட்டத்திற்கு முரணான பயன்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு கொள்கை ரீதியான மாற்றங்களின் தேவை கட்டாயமானது.

கந்தளாய் பிரதேசத்தைச் சேர்ந்த, விவசாயத்தில் ஈடுபடும் பெண் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் "எங்கள் வாழ்வாதாரம் விவசாயம். விவசாயம் செய்ய 04 லட்சம் ரூபாவை கடனாகப் பெற்றேன். கொரோனா வைரஸ் பிரச்சனை, அதேபோல எதிர்பாராத வகையில் ஏற்பட்ட சுகாதார பிரச்சினைகள் காரணமாக சில காலத்தின் பின்னர் கடனைத் திருப்பி செலுத்த முடியாத நிலை உருவானது. அதன் பின்னர் கடன்



**தற்கொலை செய்து கொள்ளல்.**

**நிலூகா குமாரி**
பல்லேகெதர, கந்தளாய்

**இவ்வாறான பல பிரச்சினைகளை எங்களுடைய கிராம மக்கள் எதிர் நோக்கியுள்ளனர். எவ்வித தீர்வுகளும் எங்களுக்கு கிடைக்கவில்லை. சிலர் விஷம் அருந்தி தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். சில குடும்பத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ முடியாமல் தவிக்கின்றனர். இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு மத்தியில் கிராமத்தில் குறிப்பிட்ட சிலரேனும் எங்களது கிராம மக்களுக்காக வந்துள்ளோம்.**

பெற்ற நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், அதே நிறுவனத்தின் சட்டத்தரணி ஒருவரையும், நில அளவையாளர் என கூறிக்கொண்ட ஒருவரையும் அழைத்து வந்து கடனை திருப்பிச் செலுத்த முடியாவிட்டால் அதற்கு ஈடாக என்னுடைய காணியின் ஒரு பகுதியை வசப்படுத்திக் கொள்வதற்கு நிலத்தை அளந்து பார்க்க வேண்டுமென அச்சுறுத்தினார். இது மிகவும் கவலை தரும் சம்பவம். நான் அதற்கு மறுப்பு தெரிவித்ததும், இந்தக் கடனுடன் எந்தவகையிலும் சம்பந்தப்படாத எங்களிடமிருந்த முச்சக்கர வண்டியை தருமாறு வற்புறுத்தினார்கள்." என்றார்.

மேற்படி நபரின் இந்தக் கூற்றுபடி, உத்தியோகத்தர்கள் அந்தக் கடனை மீளமைத்திருப்பதுடன், பிரச்சினையை இணக்கத்துடன்



**ரவீந்ர ரணசிங்க**
பாடசாலை ஆசிரியர்,
கந்தளாய்

**அந்தக் கிராமங்களில் பெண்கள் ஒன்றிணைந்துதான் பெண்கள் அமைப்புகளை உருவாக்கி கடன்களை பெற்றுள்ளார்கள். உண்மையில் எங்களால் முடியுமாக இருந்தால் அப்பெண்களை ஒன்றிணைத்து ஏதேனுமொரு உற்பத்தித்துறை சார்ந்த பயிற்சியினை அவர்களுக்கு வழங்கி அனைவரையும் ஒரு செயற்றிட்டத்திற்குள் உட்படுத்த முடியுமாக இருந்தால் அச்சந்தர்ப்பங்களில் நான் யோசனைகளை முன்வைத்தேன். உங்களுடைய கிராமங்களுக்கு பொருத்தமான உற்பத்தி தொழில் முறை ஒன்றினை உருவாக்கி கொள்வதற்கான வழிகாட்டல்களை செய்கிறேன் என்று கூறினேன். உதாரணமாக ஏதேனும் ஒரு பயிர்ச்செய்கையினை செய்தல் அல்லது ஏதேனும் ஒரு உற்பத்தி சார்ந்த தொழிலை ஆரம்பித்தல் அல்லது கோழிப் பண்ணைகளை உருவாக்குதல், மாட்டுப்பண்ணைகளை உருவாக்கி பால் உற்பத்தியில் ஈடுபடுதல் அல்லது இஞ்சி பயிர்செய்கையினை ஆரம்பித்தல் அல்லது மஞ்சள் பயிர்செய்கையினை ஆரம்பித்தல் போன்ற உற்பத்தி துறை சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக அவர்களுக்கான சந்தையினையும் உருவாக்கிக்கொள்ளலாம். இதற்கு உடன்படுவார்களாக இருந்தால் முழு கிராமத்திற்கும் ஒரு வளவாளரை அழைத்துச் சென்று தேவையான வழிக்காட்டல்களை வழங்குவதற்கும், ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கும் உதவ முடியும். மேலும் இதனூடாக இந்த நுண்நிதிக் கடன் என்ற சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் பெண்கள் சாதகமான அபிவிருத்தியை பெறுவதற்கும் தேவையான செயற்பாடுகளை எங்களால் செய்யமுடியுமென நான் நினைக்கின்றேன். நம்புகின்றேன்.**

**இலங்கையில் நுண்நிதிக் கடன் செயற்திட்ட பிரிவின் செயற்பாடுகள் அர்த்தம் மிக்கதாகவும் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் தரமிக்க மற்றும் சிறந்த ஒழுங்குமுறையான பொறிமுறையொன்று செயற்படுத்தப்படுதல் மிகவும் அவசியமானதாகும். உடனடித் தீர்வாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுதல் அவசியமாவதோடு நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் நுண்நிதிக் கடன் பெறும் சட்டமானது உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.**

முடித்துக்கொள்ள ரூபாய் 580,000/- மீளச் செலுத்துமாறு கேட்டுள்ளனர். அந்தப் பெண் ஏற்கனவே எவ்வளவு பணத்தை திருப்பி செலுத்தியுள்ளார் என்பதற்கான எந்தவொரு எழுத்தாவணமோ, தன் தரப்பு நியாயத்தை நிரூபிப்பதற்கான பற்றுச்சீட்டோ அவரிடம் இல்லாமை துரதிர்ஷ்டம். இவ்வாறான நிதி கம்பெனிகள், கடன் பெற்றவர்கள் அதனை திருப்பி செலுத்தும் தவணைகளுக்குரிய பற்றுச் சீட்டுகளை வழங்குவதில்லை. மாறாக, அச்சிடப்பட்ட சில மணி நேரங்களின் பின்னர் அழிந்து போகும் ரசீது வழங்கப்படுகிறது. நுண் நிதிக் கம்பெனிகள் வேண்டுமென்றே தங்களை சுரண்டுவதற்காக செயற்படுவதால், தம்வசம் எந்தவொரு ஆதாரத்தையும் விட்டுவைப்பதில்லை என்பது கடன் பெற்றவர்களின் முறைப்பாடாக உள்ளது.

மேற்படி சம்பவமானது, எத்தகைய ஒழுங்குப்படுத்தலும் அற்ற இதுபோன்ற செயற்பாடுகளால் கடன் பெறுபவர்கள் எதிர்கொள்ளும் மன உளைச்சல் மற்றும் மக்களை பயமுறுத்தி எப்படியாவது கடன் மீளச் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு குறித்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத நடைமுறைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது. ஏற்கனவே சமூக மற்றும் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்ட நபர்கள், இதுபோன்ற நுண்நிதி கம்பெனிகள் பெண்கள் மீது பிரயோகித்து வரும் தேவையற்ற அழுத்தத்தை



## வறுமையில் வாடும் பெண்களுக்கு சுயாதீனமாக முன்னேற முடியாதா?

### நான் சுரங்க ரூபசிங்ஹ.

தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி அமைப்பு
கந்தளாய்

நான் சுரங்க ரூபசிங்ஹ. தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி அமைப்பின் தலைவராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன். விசேடமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் நாங்களும் ஒன்றிணைந்து கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். நுண்நிதிக் கடன் நிதி நிறுவனங்கள் பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்ட கிராமங்களில் 95 வீதமான பெண்களை இந்த கடன் சுமைக்குள் தள்ளியுள்ளனர். இதன் காரணமாக நாங்கள் சட்டத்திற்கு முன் நீதியைப் பெற்றுத்தருவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதோடு, கிராமங்கள் தோறும் காணப்படும் இவ்வாறான பிரச்சினைகளை அறிந்து மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உதவிகளை நாடியுள்ளோம். கிராமிய பெண்களின் கடன்களை தீர்ப்பதற்கு அல்லது இந்த நுண்நிதிக் கடன்களிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம். அதேபோல இப்பிரச்சினை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியில் முறைப்பாடு செய்துள்ளதோடு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளோம். மேலும் இக்கிராமிய பெண்கள் சுயாதீனமாக முன்னேறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதோடு கிராமிய பெண்கள் அமைப்புகளை உருவாக்கி அதனூடாக கடன் திட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை உருவாக்குவதோடு, பெண்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

இன்னும் எத்தனை காலத்திற்கு தாங்கிக்கொள்ள முடியும் என்பது பிரச்சனையின் வடிவத்தை மேலும் சிக்கலாக்கி உள்ளது.

திருகோணமலையில் இடம்பெற்று வருகின்ற சமூக அநீதிக்கு எதிராக செயற்பட்டுவரும் சிவில் செயற்பாட்டாளர்கள் கருத்து தெரிவிக்கையில் “நுண்நிதியினைக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப நினைத்த பெண்கள் தற்போது தமது வாழ்வுரிமையையும் கைவிடும் நிலை உருவாகி உள்ளது. சிலர் ஏற்கனவே உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்” என்றனர். இந்த நுண் நிதிக்கடன் பொறி அனேகமான பிரதேசங்களில் பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது.

இதில் சிக்கிக்கொள்ளும் பெண்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் போதிய கரிசனையை கொண்டிருப்பதில்லை. கடனுக்கான தவணைப் பணத்தைச் சேகரிப்பதற்காக சம்பந்தப்பட்ட நுண்நிதி கம்பெனிகள் சார்பாக வருகின்ற உத்தியோகத்தர்களால் புரியப்படுகின்ற பாலியல் வற்புறுத்தல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. இந்தப் பெண்கள் சட்டப் பரிகாரத்தை நாடுவதற்கும், தீர்வுக்காக அதிகாரிகளைத் தொடர்பு கொள்வதற்கும் நாம் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

இத்தகைய சம்பவங்கள், பொருளாதார ரீதியான ஒரு பிரச்சினை எவ்வாறு சமூகச் சீர்கேடாக மாறுகிறது என்பதற்கு சான்றாக விளங்குகின்றன. ஆகவே, நுண்நிதி ஃ நுண் நிதிக் கடன் திட்டங்களை சட்டப்படியாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக மாற்றிக் கொள்வதற்கான துரித மற்றும் வலுவான நகர்வுகளின் அவசியத்தை இவை வலியுறுத்துகின்றன.

இந்தக் கட்டுரையின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆக்கபூர்வமாக செயற்பட்டு வருவதோடு, ஆதரித்து வாதாடும் பல்வேறு செயற்பாடுகளுக்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இத்தகைய சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மனித உரிமை மேம்பாட்டுக்கான ஆற்றலை விருத்தி



### எவ்வித செயற்திட்டங்களோ அல்லது எவ்வித பின்புலமும் இன்றி கடன் வழங்கும் செயன்முறை

**காந்தி ஐயமஹா**
பிரதேச சபை உறுப்பினர்
கந்தளாய்

இந்த நுண்நிதிக் கடனானது ஏதேனுமொரு சுய தொழிலை செய்பவர்களுக்காகவே பெற்றுத் தரல் வேண்டும். உண்மையில் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. உண்மையில் நானும் கூட கேட்கின்றேன் மத்திய வங்கியிடம் இந்த கடன் வழங்கும் முறையினை தடுத்து நிறுத்த முடியுமாயின் அது மிக்சிறந்த ஒரு விடயமாகும். இலங்கையில் மரக்கிளைகள் உருவாகுவதைப் போன்று கடந்த காலங்களில் உருவாகின. இந்த நிதி நிறுவனங்கள் தங்களுக்கிடையிலான போட்டித் தன்மையின் அடிப்படையிலேயே எங்களுடைய பெண்களுக்கு கடன் வழங்கும் செயற்பாட்டினை முன்னெடுத்தனர்.
கடனை மீள செலுத்த வேண்டி இருக்குமானால் ஏதேனுமொரு நுண்நிதிக் கடன் நிறுவனத்திற்கு அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் இந்த பெண்களினுடைய வீடுகளுக்குச் சென்று கடனைச் செலுத்துங்கள், செலுத்துங்கள் என்று கூறிக் கொண்டு அவர்களை தொடர்ந்து மன ரீதியாக பாதிப்புக்கு உள்ளாக்கும் செயற்பாட்டையே செய்கின்றனர்.



# சட்டத்தினூடாக நீதியை பெற்றுக்கொள்வதற்கு பெண்களுக்கு இருக்கின்ற இடையூறுகள்

**சட்டத்தரணி சுனேத் ஆர். விமலசிறி**
கந்தளாய்

கடனாளிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ள இந்நிதி நிறுவனங்கள் ஒரு லட்சத்துக்கும் குறைவான கடன்களுக்கும் கூட வழக்கு தொடர்ந்துள்ளது. இவ்வாறு மிகவும் குறைந்த கடன்களுக்கும் கூட நிதி நிறுவனங்கள் வழக்கு பதிவு செய்வதன் காரணமாக இந்த வழக்கிற்காக கடனாளிகள் சட்டத்தரணிகளை நாடும் போது மிகவும் பாரதூரமான பிரச்சினைகளை சந்திக்கின்றனர். அதாவது, ஐம்பதாயிரம் கடன் தொகைக்கு தொடரப்படுகின்ற வழக்கின் போது சட்டத்தரணிகளுக்கு ஐம்பதாயிரத்தையும் விட பன்மடங்கு அதிகமான பணத்தை செலுத்த வேண்டிய இக்கட்டான நிலையை மக்கள் எதிர் நோக்குகின்றனர்.

சில நேரங்களில் எங்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற சம்பவங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் லஞ்சம் தொடர்பான பிரச்சினைகள் அதிகமாகும். கடன் சேகரிக்க வருகின்ற அதிகாரிகள் அந்த கடனை குறைப்பதற்காக அல்லது இல்லாமல் செய்வதற்காக பாலியல் லஞ்சம் கோரும் சந்தர்ப்பங்களும் மிக அதிகமாகும். விசேடமாக இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் கடிதங்களையும் கூட பெண்கள் எங்களுக்கு வழங்கியுள்ளனர்.

நுண்நிதி கடன் பெற்றுக்தருவது வறுமையினால் வாடும் மக்களை, பெண்களை அவ்வறுமையிலிருந்து மீட்டெடுக்கும் நோக்கிலேயே இக்கடன் வழங்கப்படுகின்றது. இதற்காகவே இந்நுண்நிதி கடன் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இலங்கையில் இது செயற்படுத்தப்படும் முறையானது, நுண்நிதி கடன் நிறுவனங்கள் கிராமங்களுக்கு சென்று வறுமையில் பெண்களுக்கு குளிர்சாதன பெட்டி, தொலைக்காட்சி போன்றவற்றை பெறுவதற்கு அல்லது அடகிலிருக்கும் நகையை மீட்டெடுப்பதற்கு போன்ற வெவ்வேறு விடயங்களுக்கு கடன் வழங்கினார்கள்.

உண்மையில் இந்நுண்நிதிக் கடனானது, பிரச்சினையாக உருவெடுப்பது இந்த நுண்நிதி கடன் நிதி நிறுவனங்களை நியமிக்கும் இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பற்ற நிர்வாகத்தின் காரணத்தினால் ஆகும். ஏனெனில் நிதி நிறுவனங்கள் கிராமங்களுக்கு சென்று பெண்களை சந்தித்து கடன் வழங்கும் ஒழுங்கு முறையொன்று காணப்படுகின்றது. எனினும் இலங்கை மத்திய வங்கி அரசு மற்றும் நிதியமைச்சு இச்செயன்முறை தொடர்பான ஒழுங்கு விதிகளை சரியான முறையில் உருவாக்கவில்லை இது பிரதான பிரச்சினையாக காணப்படுகின்றது. இவ்வாறு ஒழுங்கு விதிகள் உருவாக்கப்படாமையின் காரணமாக கிராமத்தில் பெண்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். விசேடமாக இந்த நுண்நிதிக் கடன் நிதி கடன் என்று வழங்கப்பட்டுள்ள கடன்கள், இலங்கை மத்திய

**வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வட்டி வீதத்தை விட பல மடங்கு அதிகமான வட்டி வீதம் நிதி நிறுவனங்களினால் கடன் வழங்கும் போது அறவிடப்பபடப்பட்டுள்ளது.**

**சில நேரங்களில் நாங்கள் களத்தில் சென்று விசாரிக்கும் போது மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்டுள்ள வட்டி வீதத்தினை விட பல மடங்கு அதிகமாக வட்டி அறவிடும் சந்தர்ப்பங்களை எங்களால் அவதானிக்க முடிகிறது. சில இடங்களில் வட்டி அறிவிடும் வீதம் 40 ஆக காணப்படும் சந்தர்ப்பங்களையும் நாம் அவதானித்துள்ளோம். அது தொடர்பான ஆதாரங்கள் மற்றும் உடன்படிக்கைகளும் எம்மிடம் காணப்படுகின்றன.**

செய்தல், சட்ட ரீதியானதும் கொள்கை ரீதியானதுமான பகுத்தாய்வுகளை மேற்கொள்ளுதல் போன்ற இடையீடுகளையும் இலங்கை மத்திய வங்கி, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆளுநர்கள் மற்றும் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அத்துடன் நிர்வாகக் கட்டமைப்பின் பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் அடங்கலாக மாவட்டச் செயலாளர்கள் உடனான பரிந்துரைத்தல்களையும் செய்துள்ளது.

விரிவான பரிந்துரைப்புச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, கடன் ஒழுங்குபடுத்தல் தத்துவச் சட்டம் ஒன்றை கொண்டுவருவதற்கு அழுத்தம் பிரயோகிக்க கூடிய பொதுமக்கள் இயக்கமொன்றை உருவாக்குவதற்கான ஆய்வுகள் இடம்பெறும் அதேசமயம், கொள்கை வகுப்பாளர்கள் உடனடியாக துலங்குவதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் இந்த விவகாரத்தை பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக அரசாங்க கணக்கு குழு, பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் இதற்கு மேலதிகமாக, நுண் நிதி / நுண் கடன் சேவை வழங்குநர்கள் மற்றும் சேவை பெறுநர்கள்தம் இலட்சியவாத நோக்கத்தை அடைந்துகொள்வதற்கும், குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு உதவுவதற்கும் அத்தோடு வறுமைக்கு எதிராக போராடுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தும் தேசியக்கொள்கை ஒன்றை வகுத்தமைக்க அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்.

## நுண் நிதியளிப்பு குறைந்த வருமானம் பெறும் குழுக்கள்தம் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப எவ்வாறு உதவுகிறது?

மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டதற்கு அமைய, சமூகத்தில் உள்ள வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் பகுதியினருக்கு உதவிக்கரமாக அமைகின்ற கிராமிய பொருளாதாரத்தில் நுண் நிதியளிப்பிற்கு ஒரு தீர்க்கமான வகிபாகத்தை நிறைவேற்ற முடியும். எனினும், சட்டமியற்றுபவர்களும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் உருவாகிவரும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வரை அத்தகைய எண்ணங்கள் எதிர்பார்ப்புகளாக மட்டுமே இருக்கும். அந்தவகையில் கீழுள்ள பரிந்துரைகள் வாயிலாக, விரிவான சமூக - பொருளாதார பிரச்சினைகளுடன் சம்மந்தப்பட்ட ஒரு சில விடயங்களை சுருக்கமாக தரப்பட்டுள்ளன. இலங்கையில் ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதித் தொழிற்பாடுகளுக்கான காலத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடிய தீர்வுகளைத் தேடும்போது மேலதிக ஆய்வுகளைச் செய்யவேண்டும்.

1. இலங்கையில் நுண் நிதி, நுண்கடன் மற்றும் ஏனைய பெண்களுடன் சம்பந்தப்பட்ட சகல தொழிற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டதான செயற்பாட்டு திட்டத்துடன் கூடிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றை திட்டமிடுதல்.
2. பாதிக்கப்பட்ட தரப்புடன் அவசியமான கலந்துரையாடலை மேற்கொண்டு, உத்தேச கடன் ஒழுங்குபடுத்தல் தத்துவ சட்டத்தை அங்கீகரித்துக்கொள்ளும் செயற்பாட்டை துரிதப்படுத்தல். நாட்டின் நுண் நிதித்துறை சார்ந்த பணிகளை அர்த்தமுள்ளதாக தர நியமப்படுத்தி பயனுறுதி மற்றும் வலுவான ஒழுங்குபடுத்தல் பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்தத்

தேவையான ஏற்பாடுகளை குறித்த சட்டத்தில் கட்டாயமாக உள்வாங்குதல். அத்தகைய ஒழுங்குபடுத்தல் கொள்கை மூலமாக வருமான பிறப்பாக்கச் செயற்பாடுகளுக்கு தேவையான நிதி உதவிகளை பெற விரும்பும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் நபர்கள் அல்லது நிறுவனங்களால் சுரண்டப்படுவதை தடுத்தல்.

3. நுண் நிதிச் சட்டம், நிதி தொழில் சட்டம் அல்லது அதற்கு எதிர்காலத்தில் கொண்டுவரப்படவுள்ள ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்கு விதிகளுக்கான பிரமாணங்களில், பணத்தை கடனாக அளிக்கக்கூடிய நுண் நிதி நிறுவனங்களில் சேவை பெறுகின்றவர்களின் மொழி உரிமையை கண்ணியப்படுத்துவதற்காக வழிகாட்டு நெறிகள் உள்ளடங்க வேண்டும். வாசித்து அறிய முடியாத மொழியில் தயாரிக்கப்பட்ட அநீதியான ஒப்பந்தங்கள் மற்றும் நிபந்தனைகள் 1997ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க நியாயமற்ற ஒப்பந்த நியதிகள் சட்டத்தால் பணிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறுவதாக கொள்ளப்படுதல் வேண்டும்.
4. பெருந்தொற்று காலத்தில் நுண் நிதிக் கடன்களை தள்ளுபடி செய்யும் நிவாரணத் திட்டங்களை அறிவித்தல் மிகவும் சிக்கலாக அமைவதால் அத்தகைய வசதி அளிப்பு நடைமுறைகள் மற்றும் அதிலுள்ள இடைவெளிகள், சவால்கள், கற்ற பாடங்களின் துணைகொண்டு முழுமையானதொரு புலனாய்வை முன்னெடுக்க இலங்கை மத்திய வங்கியும், ஏனைய அரச நிறுவனங்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக தமது வருமானத்தை இழந்த நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள கிராமிய, விழிப்புநிலை சுயதொழில் பெண்கள் எதிர்நோக்கும் அநீதிகளை நிவர்த்தி செய்தல்.
5. மட்ட நிர்வாக பொறிமுறை, மாவட்டச் செயலகங்களின் புள்ளிவிபர பிரிவு, மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களின் முறையான ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புடன் நுண் கடன் பிரச்சனையால் சிக்குண்ட நபர்கள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டியதோடு பாதிக்கப்பட்டவர்களின் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு தரவுகளை சேகரிக்க வேண்டும்.
6. வாழ்வாதார முன்னேற்றத்திற்காக நுண் நிதி உதவியை எதிர்பார்க்கும் வறிய மற்றும் விளிம்புநிலை மக்களை கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கான நிர்வாக முறைமையில் மாவட்ட மற்றும் பிரதேச மட்ட மையமாக செயல்படுவதற்கு உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல்.
7. சுய தொழில் மற்றும் பல்வேறு தொழில் முயற்சிகள் ஊடாக தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப போராடும் மக்களுக்கு தேவையான நிதி உதவி பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்.
8. சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி, சமுர்த்தி, சமூக அபிவிருத்தி, சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம் அத்துடன் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் இயங்கிவரும் சமூக ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர்கள், கிராமிய அத்துடன் வறிய மக்களுடன் குறிப்பாக, நுண் நிதிக் கடனை அடிப்படையாகக்கொண்ட நிதிச் சேவைகளின் நிதி உதவியினை ஆதாரமாகக் கொண்ட பெண்களின் வாழ்வாதாரத்தில் உயிரோட்டத்துடன் இணைந்து கொள்ளுதலும் கண்காணித்தலும்.
9. மொழி உரிமைகள், நியாயமற்ற உடன்படிக்கைகள், நிபந்தனைகள், சட்டத்திற்கு முரணான கடன் சேகரிப்பு, பெண்களின் உரிமைகள், அந்தரங்கத்திற்கான உரிமை மற்றும் நியாயமற்ற ஒப்பந்த நெறிகள் போன்ற உரிமை மீறல்கள் தொடர்பாக துலங்கும்போது நாடெங்கிலுமுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்கள் சட்ட உதவி ஆணைக்குழுவின் பங்கேற்றலை விருத்தி செய்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டும்.

# நுண் நிதி கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்ட ஆதிவாசி பெண்கள்

**லக்மால் கே பதுகே**

வெல்லஸ்ஸ மற்றும் பிம்தென்னயின் தம்பான பிரதேசத்தை மையமாகக் கொண்டு நமது கலாசாரத்தைப் பேணிக் காத்தவாறு கானகத்தை அண்டி வாழ்ந்து வந்த வேடுவர் இன மக்கள், திறந்த பொருளாதாரத்தைத் தொடர்ந்து எமது நாட்டில் வியாபித்த அபிவிருத்தி ஒளிக்கீற்றுக்களால் தமது பூர்வீக நிலங்களை இழந்தனர். அந்தக் கீற்றுகள் வேடுவர்களின் கலாசாரம், வாழ்வியல், பூர்வீக நில உரிமையை எரித்துபோட்ட தீப்பிழம்பானதே அன்றி, ஒரு போதும் அவர்கள்தம் வாழ்வில் புத்தொளி வீசவில்லை. அவர்களின் வாழ்வியல் அபிவிருத்தியின் தீப்பிழம்புகளின் நிழலில் தொலைந்துபோனது.

சரணாலயங்கள் வனப் பூங்காக்களாக மாற, 80களில் இந்த மக்கள் அங்கிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டனர். இது வேட்டையாடுவதையும் தேன் எடுப்பதையும் தடுத்தது. வேட்டைத் தொழிலோடு பின்னிப் பிணைந்திருந்த பல்வேறு கலாசார அம்சங்களும், பூதங்களை வழிபடுதல் போன்ற வழக்காறுகளும் காலாகாலமாக அவற்றை நிறைவேற்றி வந்த காடுகளுக்குள் செல்வதை அரசாங்கத்தின் சட்ட திட்டங்கள் முடக்கிப் போட்டதால் கைவிடப்பட்டன.

இதனால் வேடர்கள் பிழைப்புக்காக பலவற்றையும் செய்யும் நிலை ஏற்பட்டது. கற்காரை (காங்கிறீட்) குலைப்பது தலுகான வேடுவத் தலைவரின் வாழ்க்கைத் தொழிலாகிவிட்டது. அவருடைய கூட்டத்திலுள்ள பெரிய சகாக்கள் கூலித் தொழில் செய்கின்றனர். பரம்பரை பரம்பரையாக குடியிருந்த திம்புலாகல வனத்திலுள்ள கற்குகைகளை பௌத்த துறவிகளிடம் காணிக்கையாக அளித்துவிட்டு, பாரம்பரிய இருப்பிடத்தையும் ஆகாரத்தையும் இழந்த இந்த மக்கள் வாழவழி அற்றவர்களாக செல்ல இடமில்லாதவர்களாக தேடுவாரற்ற, கவனிப்பாரற்று கதியற்றவர்களாக வாழ்கின்றனர்.

## கம்பெனிகாரர்களுக்கு இரையான மக்கள்

அரசாங்கத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அதிலிருந்து தவறியதால் வறுமைக்கு இரையான வேடுவ மக்களை, ஒரு தசாப்தத்திற்கு முன்னர் காளான்கள் முளைப்பதுபோல் எமது நாட்டில் காலூன்றிய நுண் நிதிக் கம்பெனிகள் மோப்பம் பிடித்து இரையாக்கி கொண்டன. வேடுவ இன மக்களைத் தேடி தொலைதூர கிராமங்களின் கடைசி மூளைவரை பறந்து சென்ற இந்த கம்பெனிகள் பரபரப்பாக தனது வேலையை ஆரம்பித்துள்ளன. கல்வியின் நிழல்கூட படாத இந்த மக்களை தமது இரையாக இனம் கண்ட கம்பெனிகள் ஹெனானிகல, அம்பாறை – பொல்லே பெத்த, கல்வல யாய மற்றும் திம்புலாகல தலுகான வேடுவ மக்களை மிகவும் தந்திரமாக தமது கடன் பொறிக்குள் சிக்கவைத்துள்ளதை காணமுடிகிறது.

வனப் போர்வைக்குள் செல்லத்தடை, சாகுபடி செய்வதற்கு வயற்காணிகள் இன்மையால் இந்த மக்கள் பொருளாதார ரீதியில் கடும் துயரங்களை அனுபவிக்கின்றனர். தேன் எடுப்பதற்கும் முள் வள்ளிக் கிழங்கு பிடுங்குவதற்கும் காட்டுக்குச் சென்று வருவதில் உள்ள தளர்வு வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு அச்சாரமாக உள்ளதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். பயிர் சாகுபடி

செய்வதற்குக் கூட ஒரு துண்டு நிலம் அற்றவர்களாக அல்லலுறும் அம்பாறை கல்வல யாய வேடுவ கிராம பெண்கள் பலரும் இந்த நுண் நிதி கம்பெனிகளுக்கு இரையாகிவிட்டனர். ரூபாய் முப்பதாயிரத்தில் ஆரம்பிக்கும் குழுக் கடன்களை சில கம்பெனிகள் வாரத் தவணைகளாக மீள அறவிடுகின்றன. இன்னும் சில கம்பெனிகள் மாதாந்தம் தவணைப் பணத்தை அறவிடுகின்றன. எவ்வாறாயினும், இவர்களின் ஏழ்மை நிலையைப் பயன்படுத்திக்கொள்ளும் இந்தக் கம்பெனிகள் கல்வியறிவற்ற இந்த மக்களை தமது வலைக்குள் மிக எளிதாக சிக்கவைத்துவிடுகின்றன.

*"முன்பு வேட்டையாடினோம். தற்போது அதற்கு வாய்ப்பில்லை. பொலிசாரும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களும் பிடித்து அபராதம்*



## காசு புத்தகத்துக்கு என்று கூறி அறைவிட்டு கொண்ட 60 ஆயிரம் ரூபா புத்தகத்தில் இல்லை!

**தலா வரிகே குசுமாவதி**

ஹெனானிகல தெற்கு

ஒரு பெண் ஊழியர் வங்கியிலிருந்து வந்தார். குழுக்களை அமைத்தார். வங்கிக் கணக்கினை ஆரம்பித்து கடன் பெற முடியும் என்றார். அதன்பின்னர் நாங்கள் குழுக்களாக ஒன்றுசேர்ந்து கணக்குகளை ஆரம்பித்து கடன் பெற்றோம். வீடு பகுதியளவில்தான் கட்டப்பட்டிருந்தது. மிகுதியை கட்டி முடிப்பதற்காக ஓரிலட்சம் ரூபாவை கடனாக பெற்றேன். அந்தத் தொகையில் புத்தகத்திற்கு என்று கூறி 60 ஆயிரம் ரூபாய் கழிக்கப்பட்டு எஞ்சிய தொகைதான் கிடைத்தது. இரண்டு வருடங்கள் வரை கடனை திருப்பி செலுத்தி வந்தேன். அதன் பின்னர் பல்வேறு பொருளாதார சங்கடங்கள் ஏற்பட்டன. எனது கணவருக்கு தொழில் இல்லை. குளத்திற்கு போவதுதான் அவருடைய தொழில். அப்படி போனபோது வன ஜீவராசிகள் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார். வழக்கு வந்தது. அதற்கு செலவு செய்ததால் மேலும் கஷ்டங்கள் ஏற்பட்டன. நான் கடன் பெற்றது ஆர்.டி.பி வங்கியில். சமீபத்தில் ஒரு கடிதம் வந்தது. அதில் நான் செலுத்த வேண்டிய தொகை 50 ஆயிரம் ரூபாய் என்றும், வட்டியோடு சேர்த்து 86 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. நான் காசு கணக்குப் புத்தகத்தை ஆராய்ந்து பார்த்தபோது அந்த 60 ஆயிரம் ரூபாய் அதில் சேர்க்கப்படவில்லை.

அநியாயமாக வட்டி அறவிடப்படுவதை பின்னர் அறிந்து கொண்டேன். வட்டியாக செலுத்தவேண்டிய தொகைக்கும் வட்டி அறவிடப்பட்டுள்ளது. நான் பெரியளவுக்கு படிக்கவில்லை. எதையும் வாசித்து பார்க்காமல்தான் கையொப்பம் வைத்தேன்.

மிகுதிப் பணத்தை செலுத்த வழியில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறேன். வழக்கு தொடரப்போவதாக கடிதம் வந்தது. வழக்கு என்று வந்துவிட்டால் ஓடி ஒழிய முடியாது. இந்தக் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்தால் நிம்மதி கிடைக்கும். இதைத்தான் நாங்கள் அரசாங்க அதிகாரிகளிடம் கேட்கினறோம்.

*விதிப்பார்கள். அதனால் கமம் செய்யும் எண்ணத்துடன் கடன் பெற்றேன். கௌப்பி விதைத்தேன் அதுவும் வறட்சியால் அடிபட்டுப்போனதால் கடனைத் திருப்பிச்செலுத்த முடியவில்லை. வழக்குத் தொடர்வதாக கூறுகிறார்கள். கடிதங்கள் வருகுது. அதில் என்ன இருக்கிறது என்று தெரியாது."*

எனத் தெரிவிக்கும் 37 வயதுடைய தலா பண்டாரலாகே சந்திரானி அம்பாறை, பொல்லே பெத்த, கல்வலயாய கிராமத்தைச் சேர்ந்தவர். இவரையும் கடன்பொறி விட்டுவைக்கவில்லை.

பெண்களை மட்டும் இலக்குவைத்து கடன் வழங்கும் நுண் நிதிக் கம்பெனிகள் முதல் கட்டமாக சிறு குழுக்களை அமைக்கின்றன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எவருக்கும் கடன் வழங்கப்படமாட்டாது என்பது அவர்களின் எழுதப்படாத நியதி. அதேபோல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இவ்வாறு கடன் வழங்கப்படுகிறது எனக் கூறுவதுமுண்டு. எவ்வாறாயினும், ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கடன் வழங்கி பிறரைப்போலவே வேடுவ மக்களையும் கடன் பொறிக்குள் சிக்கவைத்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

*"ஒரு இலட்சம் ரூபாய் பெற்றேன். வாரத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 2650. பணத்தைச் சேகரிக்க வருபவர்களிடம் ரூபாய் 500 கொடுப்பேன். என்ன செய்வதென்று தெரியவில்லை ஐயா. கூலி வேலைக்கு போகிறேன். மீண்டும் பயிர்ச்செய்ய பணம்*



## வழக்கு தொடர்ந்தால் சிறைவாசம் தான்!

**ஊரு வறிகே விமலாவதி**

ஹெனானிகல ஆதிவாசிகள் கிராமம்

குளத்துக்கு செல்வதுதான் எனது கணவரின் தொழில். தேன் எடுக்க காட்டுக்கும் செல்வார். தேன் எடுக்கச் சென்றபோது மரத்திலிருந்து விழுந்ததால் கை முறிந்தது. பின்னர் அவரை மேலும் நோய்கள் தொற்றிக் கொண்டதால் கட்டிலில் முடங்கிப் போனார். நான் கொமர்ஷல் கிறடிட் மூலமாக ஓரிலட்சம் ரூபாய் கடன் பெற்றேன். அதில் 37 ஆயிரம் ரூபாய் வரை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. கடனைத் திருப்பி செலுத்துமாறு தெரிவித்து கடிதம் வந்தது. எனது கணவர் நோய்வாய்பட்டு இருப்பதால் செலுத்த முடியாமல் போனது. தற்போது அதை செலுத்துவது பற்றி நினைத்துப் பார்க்கவே முடியாது.

வீட்டுக்கே வந்து கடன் கொடுத்தார்கள், ஒப்பம் வாங்கினார்கள். நான்கு பேரை பிணையாக வைத்து மும்மூன்று பேர் குழுவாக சேர்ந்துதான் கடன் வாங்கினோம். அது சம்பந்தப்பட்ட எதையும் வாசித்து பார்க்கவில்லை, வாசித்துப் பார்க்கும் அளவுக்கு எழுத்தறிவும் இல்லை.

தற்செயலாக வழக்கு என்று வந்துவிட்டால் சிறைக்குச் செல்வதைத் தவிர வேறு வழி இல்லை. வேறு என்னதான் செய்வது? சமூர்த்தி கொடுப்பனவும் இல்லை. வேறு கொடுப்பனவும் இல்லை. எங்கள் கிராமத்திற்கு என்று எந்த ஒரு தொழில்வாய்ப்பு இல்லை. எந்த அரசாங்கமும் எங்களுக்கு எதையும் தரவில்லை. இந்தக் கடன்களை தள்ளுபடி செய்து, எமது கிராமத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியை பெற்றுத் தந்தால் பெரும் உதவியாக இருக்கும்.

*இல்லை. காட்டுக்குச் செல்லவும் முடியாது. எங்களுக்கு காணியும் இல்லை."*

கல்வலயாய வேடுவர் கிராமத்தைச் சேர்ந்த 23 வயதுடைய கலா பண்டாரலாகே புஞ்சி மெனிகா ரூபாய் 50,000 கடனாகப் பெற்று கடன் பொறியில் சிக்கி



## தவணைப் பணத்தை கொடுக்கும் வரை வாசலில் நிற்பார்கள்

### ஊரு வறிகே அனுலாவதி

மீன்பிடி வலையை வாங்குவதற்கு வழியில்லாததால் கடன் பெற நேர்ந்தது. வலையை வாங்க முடியாமல் போனது. கொஞ்சம் வாங்கி அதை வைத்து தொழில் செய்தோம். அதில் வந்த வருமானம் உணவுக்கு மட்டும் செலவானது.

கோமர்கஷல் கிறடிட் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் இங்கு வந்து 10 பேர் கொண்ட குழுக்களை அமைக்குமாறு கூறினார்கள். குழுவுக்கு தேவையானவர்களை நான்தான் சேர்த்தேன். ஒன்றாக சேர்ந்த கடன் பெற்றோம். ஆரம்பத்தில் நான் 50 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றேன். பின்னர் ஓரிலட்சம் பெற்றேன். படிவங்களை நிரப்பி கையப்பம் வைக்கச்சொன்னார்கள். அது எந்த மொழியில் இருந்தது என்று கூடதெரியாது. படிப்பறிவு இல்லை. பெற்ற தொகையில் 60 ஆயிரம் ரூபாய் வரை திருப்பிச் செலுத்த முடிந்தது. எஞ்சிய தொகையை செலுத்த முடியவில்லை. அதன் பின்னர் மத்தியஸ்த சபைக்கு வருமாறு கடிதம் வந்தது. அங்க போனதும் முடிந்தவரையில், கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கடனைத் திருப்பி செலுத்துமாறு சொன்னார்கள். அதன்படி செய்தேன். 20 ஆயிரம் ரூபாய் அளவில் செலுத்தவிருந்தபோது, அந்தத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன் பின்னர் கடன் பெறவில்லை.

நாங்கள் பெற்ற ஒவ்வொரு கடனுக்கும் அதிகமான வட்டியை செலுத்தியுள்ளோம். வாரத்திற்கு வாரம் செலுத்தும் தவணைப் பணம் மாறிக்கொண்டே இருக்கும். நாங்கள் படிப்பறிவற்றவர்கள். அவர்கள் புத்தகத்தில் இடும் குறிப்புகளை வேறு நபர்களின் உதவியுடன் நாங்கள் அறிந்து கொள்வோம். பொய்யான கணக்குகளை போட்டிருந்தாலும் எங்களுக்கு தெரியாது. அரசாங்க வங்கிகள் எங்களுக்கு கடன் தரவில்லை. அதனால் இவர்களிடம் கடன் வாங்கினோம்.

துவணைப் பணத்தைச் செலுத்த தாமதமானால் அவர்கள் வீட்டுக்கு வந்து தொந்தரவு செய்வார்கள். பணத்தை கொடுக்காவிட்டால் போகமாட்டார்கள். வாசலில் காவல் இருப்பார்கள். இரவு நேரங்களில் வந்து தொந்தரவு செய்வார்கள். எப்படியாவது தவணைப் பணத்தை தரும்படி கேட்பார்கள். யாரிடமாவது கைமாறி வாங்க முடிந்தால் வாங்கி கொடுப்போம், அதுவும் முடியவில்லை என்றால் ஏசுவார்கள் கேட்டுக்கொண்டே இருப்போம். இல்லாததை எப்படிதான் கொடுப்பது?

செலுத்த முடியாத நிலையில் உள்ளார்.

## நோய்வாய்ப்பட்ட பெண்ணுக்கும் கடன் கொடுத்துள்ளார்கள்

நுண் நிதிக் கம்பெனிகளின் கடன் பொறிக்குள் சிக்குண்டவர்களில் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெறும் வேடுவப் பெண் ஒருவரும் உள்ளார். கல்வலயாய கோரளை கிராமத்தில் வசிக்கும் ஐம்பது வயதான ஸ்ரீயாகாந்தி என்பரை ஏமாற்றி குழுவிலுள்ள மற்றொருவர் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டாத அந்தப் பெண் தெரிவித்தார்.

> *“நான் கடன் வாங்கிக்கொடுத்தது பண்டார மெனிகேவுக்கு. நான் ஒப்பம் வைத்தேன். பின்னர் கடனைச் செலுத்துமாறு எனக்கு கடிதம் வந்தது. கடன் தந்தவர்கள் வீடுதேடி வந்தார்கள். கடனைச் செலுத்தும்படியும், செலுத்தத் தவறினால் வழங்குப்போடுவதாகவும் சொன்னார்கள்.”*



## உணவுக்கே வழியில்லை.... எப்படி கடன் கட்டுவது?

**பீ. அஜந்தா**

வங்கியிலிருந்து கிராமத்திற்கு வந்து கடன் தந்தார்கள். பத்திரங்களை நிரப்பி நாங்களும் கடன் பெற்றோம். நான் வீடு கட்டுவதற்காக கடன் பெற்றேன். என்னுடைய கணவர் கூலி வேலை செய்கிறார். மண் வீடுதான் இருந்தது. பின்னர் செங்கல் அரிந்து இரண்டு அறைகளை கட்டினோம்.

கடனாக பெற்ற தொகை ஒன்றரை லட்சம் ரூபாய். அதற்கு தவணையாக எண்ணாயிரத்து ஐந்நூறு ரூபாய் செலுத்தி வந்தோம். எனக்கு எழுத படிக்கத் தெரியாது. அந்த படிவங்கள் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன. குழுவில் மூன்று பேர் இருந்தாலும் ஒருவர் படிவத்தை நிரப்ப வேண்டும். நான் நிரப்பவில்லை. நாங்கள் கையப்பம் வைத்து வங்கியில் கொடுத்ததும் பணம் கிடைத்துவிடும். அந்த படிவத்தில் என்ன இருந்தது என்பதை பெரிதாக பொருட்படுத்தவில்லை.

வேலையும் வருமானமும் இல்லாததால் கடனை செலுத்த முடியாமல்போனது. தற்போது அது சேர்ந்துவிட்டது. அவர்கள் பணத்தை வசூலிக்க வந்தார்கள். நாங்கள் செலுத்துவதற்கு பணம் இல்லை என்று கூறியதும் திரும்பி போய் விட்டார்கள். தற்போது என்ன செய்துள்ளார்கள் என்பது தெரியாது. வழக்குத் தொடர்ந்தால் போகவேண்டும். கூலி வேலையும் இல்லாததால் வாழ வழியும் இல்லை. இந்த நிலைமையில் எப்படி கடனை திருப்பிச் செலுத்துவது? தண்ணீர் கட்டணம் செலுத்த வேண்டும். மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டும். அவையும் கூடிவிட்டன. பிள்ளைகள் படிக்க வேண்டும். இவற்றை செய்யும்போது கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

எது வந்தாலும் அதை எதிர்கொள்ள தயாராக இருக்கின்றேன். கடனை தள்ளுபடி செய்தால் நல்லது. என்ன செய்வார்கள் என்று யாருக்கு தெரியும்?

என்றார்.

கடன் வழங்கும் நிறுவனங்களை முறையாக கண்காணித்தால் நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண் கடன் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கான அவசியம் எழாது. அந்தப் பெண்ணுக்கு கையொப்பம் மட்டுமே வைக்கமுடியும். அவருக்கு மட்டுமல்ல அந்தக் கூட்டத்தில் உள்ள ஏனையவர்களின் நிலையும் அதுதான். தாங்கள் செய்த ஒரே காரியம் வந்த நபர்களால் நிரப்பி தரப்பட்ட படிவங்களில் கையொப்பம் இட்டதுமட்டுமே என



## நிலுவை முப்பதாயிரத்திற்கு ஓரிலட்சம் செலுத்த வேண்டியுள்ளது.

எனக்கு வயது 42. தற்போது நான் ஹேனானிகல தெற்கில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் என்னுடைய வசிப்பிடம் தம்பான. சிறு வயதில் நாங்கள் இங்கு வந்தோம். நான் வீடு கட்டுவதற்காக LOLC இல் ஓரிலட்சம் தொகையை கடனாக பெற்றேன். பெற்ற கடனை பிரச்சினையில்லாமல் திருப்பி செலுத்தி வந்தேன். இருந்தபோதும் 30 ஆயிரம் ரூபாவை செலுத்த முடியாமல்போனது. எனக்கு எதிராக வழக்கு தொடரப்போவதாக கடிதம் வந்தது. வட்டியோடு சேர்த்து ஓரிலட்சத்தை செலுத்த வேண்டியுள்ளது.

எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பெயரை மட்டும் எழுதுவேன். ஒரு பத்திரத்தைக் காட்டி இந்தெந்த இடங்களில் கையொப்பம் வைக்குமாறு கேட்டார்கள் கையொப்பம் வைத்துக் கொடுத்தோம். அதில் என்ன இருந்தது என்று எங்களுக்கு தெரியாது. நாங்கள் எதையும் கேட்கவுமில்லை. அந்த உத்தியோகத்தர்கள் எதையும் விளக்கமாக சொல்லவும் இல்லை. இரண்டரை வருடங்களுக்கு கடன் தந்தார்கள். தவணையாக செலுத்த வேண்டிய தொகை எண்ணாயிரம் ரூபாய். எவ்வளவு வட்டி என்பதும் தெரியாது.

செலுத்தி வந்தபோது வட்டி அதிகம் என்பதும். பெற்ற தொகையிலும் அதிகமாக செலுத்திவிட்டோம் என்பதும் தெரிந்தது. இறுதியாக பல பிரச்சனைகள் ஏற்பட்டன. எங்களுடைய கணவன்மார்கள் தொழிலுக்கு செல்வதும் இல்லை. குளத்துக்குப் போவார்கள். திடீரென அந்த வேலையும் இல்லாமல் போனதால் எல்லாம் சிக்கலானது. பெற்ற தொகையிலும் அதிகமாக செலுத்தினோம். இறுதியாக செலுத்தவேண்டிய 30 ஆயிரம் ரூபாய் ஓரிலட்சமாக வளர்ந்துவிட்டது.

தற்போது கடிதம் வந்தாலும் அதை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. வழக்கு தொடர்ந்தாலும் பிரச்சினை இல்லை. வழக்கு என்று வந்துவிட்டால் எதிர்கொண்டு ஆகவேண்டும். 30 ஆயிரத்திற்காக ஒரு லட்சம் ரூபாவை எந்த வகையிலும் செலுத்த முடியாது.

அவர்கள் வந்ததன் நோக்கமே கடன் வழங்குவதுதான். வற்புறுத்தியாவது கடனை தந்துவிடுவார்கள். தந்தார்கள் நாங்களும் பெற்றோம். போகப்போக பிரச்சினைதான் மிஞ்சியது. இந்தக் கடன்களை தள்ளுபடி செய்து தருமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.



## நாங்களும் பாகற்காயில் உள்ள புழு போன்றவர்கள்

**ஊரு வரிகே கருணாரத்ன**

கடன் வழங்க வந்த முதலாவது நாளில் நான் இருக்கவில்லை. குளத்து தொழிலுக்கு போயிருந்தேன். அன்று பெரியளவில் மீன்கள் கிடைக்கவும் இல்லை. கிடைத்தது 5 கிலோ வரையில்தான். நான் திரும்பி வந்தபோது, கொமர்ஷல் வங்கியிலிருந்து வந்ததாக கூறிக்கொண்ட சிலர் இங்குள்ள பெண்களை சந்தித்துப் பேசியிருப்பதை அறிந்து கொண்டேன். பின்னர் நான் எவ்வாறு கடன் வழங்கப்படும் என்று கேட்டபோது, சலுகை முறையில் வழங்கப்படும் என்று கூறினார்கள். நாங்கள் படிக்கவில்லை. எங்களுடைய குடும்ப பெயர்தான் ஊரு வரிகே. உண்மையாகவே சொல்லப்போனால் யூ.டப்ளியு என்றால் என்ன என்பது கூட எங்களுக்கு தெரியாது.

மூன்று நாட்கள் கழிந்தது இவ்வாறு வந்தவர்களின் ஒருவர் வந்தார் அவர் ஆண். குழுக்களை அமைத்தார். ஒரு குழுவில் மூன்று பேர். முதல் கட்டமாக 50 ஆயிரம் ரூபாய் தந்தார்கள். அதை நாங்கள் திருப்பிச் செலுத்தி வந்தோம். செலுத்தி முடித்த பின்னர் நான் ஓரிலட்சம் ரூபாய் கடன் பெற முயற்சி எடுத்தேன். ஆனால் தருவதாக தெரிவித்த தொகை 60 ஆயிரம் ரூபாய். வீடு கட்டுவதற்கு அத்திவாரம் போடும் நோக்கத்துடன்தான் நான் அந்தத் தொகையை கேட்டேன். 60 ஆயிரம் ரூபாய் அதற்கு போதாதென வந்திருந்த பெண் உத்தியோகத்தரிடம் கூறினேன். இந்தத் தொகையில் உங்களுக்கு எந்தப் பயனும் இல்லை. தேவையானதை செய்ய முடியாது என்று கூறியதும் அவர் அதற்கு விருப்பம் தெரிவித்தார்.

படிப்பறிவு இல்லாதவர்களிடம் இப்படி ஒப்பம் வாங்குவது அநியாயம். மனைவிமார்களிடம் கடன் கொடுக்கிறார்கள் எங்களுக்கு எதுவும் தெரியாது. பெற்றுள்ள கடனை சலுகை முறையில் திருப்பிச் செலுத்தலாம் என்று மனைவிமார்களிடம் வந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த முட்டாள்களும் விருப்பம் தெரிவிக்க, பின்னர்தான் இவர்கள் இந்தப் பொறிக்குள் சிக்கியுள்ளதை அறிந்து கொண்டோம். என்ன செய்வது, திருப்பி செலுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை. வட்டி அதிகம்தான், எங்களுக்கு இதை புரிந்து கொள்ளும் அளவுக்கு அறிவு இல்லை. எப்படியாவது இதை செலுத்தியாக வேண்டுமே.

தற்செயலாக வழக்கு தொடர்ந்தால் என்ன செய்வது- அப்படி எதையும் செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையைச் சொன்னால், நாங்கள் அனுமதியில்லாத வாசிகள். போகவர இடமில்லை. கூலி வேலை செய்துதான் பிழைப்பு நடத்துகிறோம். அன்றாட உழைப்புதான் எங்கள் உணவு. பிள்ளைகள் படிக்க வேண்டும். விழுந்து கிடக்கும் குழியிலிருந்து கரைசேர வழிதேடி துடித்துக் கொண்டிருக்கிறோம். என்றாவது எங்கள் பிள்ளைகள் படித்து நல்ல வேலை செய்து எங்களைக் காப்பாற்றுவார்கள்.

**தற்போது அரசாங்கம் எங்களுக்கு எந்த உதவியும் செய்வதில்லை. சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு சமீபத்தில் 09 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. இல்லாத எங்களுக்கு எதுவும் இல்லை. ஆதிவாசிகளுக்கு ஓரவஞ்சனை கட்டப்படுகிறது. மக்கள் பிரதிநிதிகள் தெஹிஅத்தகண்டியவில் இருக்கிறார்கள். ஹெனானிகல மக்களின் ஓட்டும் அவர்களுக்குத்தான் விழுந்தது. அவர்களும் வந்து பார்ப்பதில்லை. நாங்கள் கூலி வேலை செய்து வாழ்ந்து வருகிறோம். எங்களுக்கு எதற்கு மக்கள் பிரதிநிதிகள்? வாய்ப் பேச்சாக ஒன்றைச் சொல்வதுண்டு....... பாகற்காயில் உருவாகும் புழு அதையே தின்று அதிலேயே செத்து விடுமாம்.... எங்களுக்கும் அதுதான் நடந்திருக்கிறது.**

வேடுவர் கூட்டத்துப் பெண்கள் தெரிவித்தனர்.

ஹெனானிகல வேடுவர் கிராமத்தில் வசிக்கும் ஊரு வரிகே அனுலாவதி, தன்னுடைய கணவர் மீன்பிடி வலைகளை கொள்வனவு செய்வதற்காக கடன் பெற்றபோதும், அதில் குடும்பத்திற்கு தேவையான நுகர்வுப் பொருட்களை கொள்வனவு செய்ததால் கடனை திருப்பிச்செலுத்த முடியாமல்போனதாக தெரிவித்தார்.

*“முதல் கட்டமாக ரூபா 50,000 கடன் பெற்றேன். பின்னர் 100,000 ரூபாய். ரூபாய் 60,000ஐ திருப்பிச் செலுத்தினேன். மிகுதித் தொகையை செலுத்த முடியவில்லை. வழக்குத் தொடரவிருப்பதாக தெரிவித்தார்கள். என்னதான் செய்வது”*

எனக் கூறினார்.

ஹெனானிகல கிராமமும் இந்தப் பொறியிலிருந்து தப்பவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டத்தின் தலைவர்களும் தவறியுள்ளனர். அந்தக் கூட்டத்திலுள்ள ஏனையவர்கள் வறுமையில் மூழ்கியுள்ளதால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல்கள் கடன்பெற தூண்டியுள்ளது. ஹெனானிகல வேடுவர்களில் அநேகமானோர் இந்தப் பொறிக்குள் சிக்கியுள்ளனர்.

## தலுகான பிரதேசமும் தப்பவில்லை

திம்புலாக தலுகான வேடுவ மக்கள் நுண்நிதி கடன் பொறியில் சிக்கியுள்ளதாக அங்குள்ள ஆதிவாசிகளின் தலைவரான பிரியந்த தெரிவித்தார். வன ஜீவராசிகள் திணைக்களம் அதேபோல் வனப் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் தங்களுடைய பூர்வீக காட்டுப்பகுதிக்குள் செல்வதற்கு தடைபோட்டுள்ளதால் தனது கூட்டத்தில் உள்ள சகாக்களுக்கு இந்த நிலை ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

*“என்னுடைய கூட்டத்தில் சுமார் 200 பேர் வரை இருக்கிறார்கள். இவர்கள் வேறுவழியில்லாமல் கூலி வேலை செய்கிறார்கள். நானும் கங்கிறீட் குலைக்கும் தொழிலுக்கு போகிறேன். சில சமயங்களில் கொழும்புக்கும் போனதுண்டு. வாழ வழி இல்லாததால் பலரும் கிராமத்திற்கு வந்து இந்த கடனைப் பெற்றுள்ளார்கள். எங்களுடைய தலைவர் நாங்கள் கூட்டம் போடும்போது எதையும் செய்ய வேண்டாம் கூட்டத்தில் உள்ளவர்களை வழி நடத்துமாறு கேட்டுக் கொண்டாலும் அதையும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்கின்றேன்.*

*மகாவலி அதிகாரிகள் எங்களுக்குச் சொந்தமான காட்டுப்பகுதிக்குள் செல்ல அனுமதிப்பதாக இல்லை. தேன் எடுக்கவும் முடியாது. காட்டு வள்ளிக்கிழங்கு தோண்டவும் முடியாது. வேட்டையாடவும் முடியாது. சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட காணியும் இல்லை. இவர்கள் காணிகளை தருவதாக தெரியவில்லை. எமது கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு காணிகளை தரவில்லை. ஆனால், வேறு ஆட்கள் காடுகளை சுத்தம் செய்து காணிகளை பிடித்திருக்கிறார்கள். இதனால் வாழ்வதற்கு கூலித்தொழில் செய்யும் நிலை உருவாகியுள்ளது.“*

எனக் கூறினார்.

## அரசாங்கத்தின் இடையீடு அவசியம்

எமது நாட்டில் வாழ்ந்து வரும் ஆதிவாசிகளான வேடுவர்கள் நுண் நிதி கடன் பொறிக்குள் சிக்கிக் பரிதவித்துக் கொண்டிருப்பதாக தேசிய ஒத்துழைப்பு அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் திரு. சரங்க ரூபசிங்ஹ தெரிவித்தார். இந்த கடன் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை மாத்திரமன்றி இங்குள்ள வேடுவ இன மக்களையும் முடக்கி அவர்களை வறுமையின் விளிம்புக்கே கொண்டு சென்றுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

“இந்த நிலை மிகவும் பயங்கரமானது. பெறுகின்ற கடனுக்கு அதிக வட்டியுடன் செலுத்த வேண்டியுள்ள தவணைப் பணத்தை செலுத்த முடியாதபோது உயிரை மாய்ப்பதுதான் வழி. இந்த நிறுவனங்கள் கடனை வழங்கும்போது, அதைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல், கடன் பெற்றவர்களிடம் உள்ளதா என்பதை ஆராய்வதில்லை. இதனால் கிராமங்களிலுள்ள விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த அப்பாவிகள் கடன் பொறிக்குள் சிக்கிக் அகால மரணத்தை தேடுகின்றனர். இந்த நிலை வேடுவ மக்களின் வாழ்வியலையும் பாதித்துள்ளமை வேதனையானது. ஹெனானிகல, தலுகான, பொல்லே பெத்த வேடுவ கிராமங்களைச் சேர்ந்த ஆதிவாசி பெண்கள் ஏற்கனவே இந்தக் கடன் பொறிக்குள் சிக்கவிட்டார்கள். இவர்கள் படிப்பறிவற்றவர்கள். கடன் பெறுவதற்கான உடன்படிக்கையை கண்ணால் பார்த்ததும் கிடையாது அதில் என்ன இருக்கின்றது என்பதும் இவர்களுக்கு தெரியாது. ஆனால் பெரிய தொகையாக கடன், அதுவும் அதிக வட்டிக்கு கடன் இவர்கள் கடனாளிகளாக மாறிவிட்டார்கள். இது மிகவும் பயங்கரமானது. இந்த நிலை தொடருமானால் எமது நாட்டிலுள்ள வறிய குடும்பங்கள் வறுமையின் பாதாளத்தில் விழுந்து காணாமல் போகக்கூடும். எனவே இதைத் தடுக்க எங்களாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம். நாங்கள் அரசாங்கத்திடம் அழுத்தமாக வலியுறுத்தி கூறுவது என்னவென்றால், இதனை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேடுவ மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த அவல நிலையை கவனத்தில் கொண்டு, கிழக்கில் கரையோரப் பிரதேசங்களை சார்ந்து வாழும் ஆதிவாசிகளுக்கு ஏதேனும் நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அரசாங்க உத்தியோகத்தர்களுடன் இணைந்து சில கலந்துரையாடல்களை மேற்கொண்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் திரு. லயனல் குருகே, ஆதிவாசிகள் விடயத்தில் எமது நாட்டில் நடைமுறையிலுள்ள தேசிய கொள்கைகள் கவலையளிப்பதாக தெரிவித்தார். அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் அந்நாட்டு வேடுவ சமூகம் பெறுகின்ற கவனிப்போம் மதிப்பும் எம்மவர்களுக்கு அன்னியமாக இருப்பது இதனை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளதென மேலும் தெரிவித்தார்.

## ஏமாற்றப்பட்ட மக்கள்

மகாவலி இயக்கம் கட்டியெழுப்பப்பட்டதைத் தொடர்ந்து தம்பான மற்றும் அதனை அண்டிய கிராமங்களை வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான காடுகளாக மாற்றி அமைத்தவர் முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க. அந்தக் காலகட்டத்தில் மிகவும் சூசகமாக தெப்பல் பண்டியா உட்பட்ட ஒரு குழுவினரை பலவாறு கதைகள் பேசி உடன்பட வைத்தனர். இவர்களுக்கு காடு, வீடு வாசல் தரப்படும் என்று கூறி ஹெனானிகல குழுவினரே இடைநடுவில் கைவிட்டனர். இவர்களில் ஒரு பகுதியினர் அதே காலப்பகுதியில் மீண்டும் தம்பான நோக்கி வந்தனர். ஆதிவாசிகள் எப்போதும் காடுகளை நேசிப்பார்கள். அவர்களின் வாழ்வு பறிக்கப்பட்டது. அரசாங்கம் அதனை அபிவிருத்தி என்ற போர்வையிலும் பல்வேறு சட்டங்களை பயன்படுத்தியும் நிறைவேற்றியது. இது மிகப்பெரிய அவலம். இவர்கள் கடன்களுக்கு இரையாகி இருப்பது அந்த அவலத்தின் ஒரு வெளிப்பாடு. இந்த நிலைக்குக் காரணம் இவர்களின் காணிகள் பறிக்கப்பட்டது மட்டுமன்றி மீன் பிடித்தல் அல்லது செய்வதற்கு ஏதுமற்ற மக்களாக மாறியதால் நிரந்தரத் தொழில் இல்லாததால் ஏற்பட்டது. தொழில் செய்யும் அளவுக்கு கல்வி பெறவில்லை, இவர்களுக்கு எழுதப்படிக்க தெரியாது. அதுவே இவர்கள் நுண்நிதிக் கம்பெனிகளுக்கு இரையாக காரணம். நுண் நிதிக் கடன்கள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தாலும் கூட, இது போன்ற நிதிக் கம்பெனிகளுக்கு ஒரு கட்டுப்பாடும் இல்லை. அதுவும் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தில் பாரிய செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. மத்திய வங்கியின் உரிய கண்காணிப்பு இன்மை அதேபோல், நிதி அமைச்சு தேவையான சட்டங்களைக் கொண்டுவர தவறியுள்ளதால், அந்த இடைவெளியை பயன்படுத்திக் கொள்ளும் இவ்வாறான கம்பெனிகள் எனக்கு நாட்டில் நுண் நிதிக் கடன்களை தவறாக கையாள்கின்ற. எனவே, ஆதிவாசிகள் விடயத்தில் அரசாங்கத்தின் கொள்கைகள் ஒரு பரந்த மட்டத்தைத் தொடவேண்டும். அதற்கான சட்டங்களை இயற்றவேண்டும். வேடுவர்

சமூகத்தைச் சார்ந்தவர்களின் கலாசாரத்தைப் பாதுகாக்க மாகாணசபைகளும் வழிவகைகளை செய்ய வேண்டும். மத்திய வங்கியும் நிதி அமைச்சும் உடனடியாக இடையீடு செய்து இவர்களுக்கு நீதி வழங்க வேண்டும்.

எமது பூர்வீக உறவுகளாக இருந்து வருகின்ற இந்த மக்களின் வாழ்விடங்களையும், அவர்களுக்குரிய சாந்தி கருமங்கள் மற்றும் கலாசாரத்தின் தொடர்ச்சியை பாதுகாப்பது எமது கடமையல்ல பொறுப்பு. அது நிறைவேறும் பட்சத்தில் அவர்கள்தம் பூர்வீக நிலத்தில் சுதந்திரக்காற்றை சுவாசித்து சுயமாக எழுந்து நிற்பர். வில்லும் அம்பும் இல்லாமலும் வேட்டையாடுவர். உங்களுக்கு தேன் கொண்டு வந்து தருவர். அது நடந்துவிட்டால் நுண் நிதிக் கம்பெனிகளின் கடன் பொறிக்குள் இவர்களை சிக்க வைப்பது எளிதான காரியமாக இருக்காது.

## வாடிக்கையாளர்களால் எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்கு நுண் நிதி நிறுவனங்களின் பதில்

இந்த ஆய்வில், கடன் பெற்றோர் முன்வைத்த பிரச்சினைகளையும் ஒட்டுமொத்தமாக நுண் நிதித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றி நுண் நிதி அல்லது குறுகிய கால கடன் வசதிகள் வழங்கும் நிறுவனங்களின் பிரதிபலிப்பினையும் வெளிப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டபோதிலும், நாம் எதிர்பார்த்த கால எல்லையில் அதை நிறைவேற்றுவது கடினமாக இருந்தது.

இந்த விவகாரம் பற்றி எம்மால், கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான திரு பீ. எஸ். ஆர். சீ. சிட்டி என்பவருடன் மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றை நடத்த முடிந்தது. எனினும், அவர் எம்முடன் மேலும் கருத்துகளை பரிமாறிக்கொள்வதற்கான ஒரு நேர்முகக் கலந்துரையாடலுக்கு இணக்கம் தெரிவித்தார்.

மேலும் எல்.ஓ.எல்.சி. நிறுவனத்தின் கருத்துகளைக் கேட்டறிவதற்கான வேண்டுகோளை முன்வைத்துள்ளபோதும், அதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. எனினும், எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

நுண் நிதி அல்லது குறுகிய கால கடன் வசதிகளை வழங்கும் பல நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள நுண் நிதியாளர் சங்கத்தின் தலைவர் திரு ஆனுர உனடான கலந்துரையாடலுக்கான வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதுடன், அவர் எதிர்வரும் நாட்களில் அதற்கான ஒரு திகதியை ஒதுக்கித்தர உடன்பட்டுள்ளார் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

நுண் நிதி அல்லது குறுகிய கால கடன் வசதிகளுடன் தொடர்புடைய சேவை வழங்குனர்கள் சார்பாக கருத்துகள் பெறப்பட்டதன் பின்னர், அவற்றை எங்களுடைய வெளியீட்டில் இதேபோல் பிரசுரித்து மக்களைச் சென்றடைய வழிவகைகள் செய்யப்படுமென்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**பதிப்பாளர்**

VOICE OF CITIZENS

CENTRE FOR POLICY ALTERNATIVES

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

www.facebook.com

www.twitter.com

www.youtube.com